Registered at the G. P. O.as a Newspaper வாரப் பதிப்பு விலை சதம் 15

# ஈழநாடு

தேசிய தினசரி National Tamil Daily

போன் 389 தபாற் பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 28 ஆம் நாள் துல்ஹஜ பிறை 27 (10-5-64) ஞாயிற்றுக்கிழமை இதழ் 89

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |


# கூட்டரசாங்கம் நிறுவ அமோக ஆதரவு

## அதிகாரத்தை பிரதமரிடம் வழங்கியுள்ளது ஸ்ரீ ல. சு. கட்சியின் காரியக்கமிட்டி

(நமது நிருபர் பொ. பாலசுந்தரம்)

கொழும்பு, சனி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை ஏற்றுக் கொள்ள விரும்பும் முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து கூட்டரசாங்கம் ஒன்று அமைக்கும் அதிகாரத்தை, இன்று கூடிய கட்சியின் காரியக் கமிட்டி அமோக ஆதரவுடன், பிரதமருக்கும், மந்திரிசபைக்கும் அளித்துள்ளது.

அடுத்த தேர்தலில் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளச் சம்மதிக்கும் கட்சிகளுடன் அரசாங்கம் கூட்டுச் சேரலாம் என நம்பப்படுகிறது.

தேசிய அரசாங்கம் அமைப்பது கட்சிக் கொள்கைக்கு முரண்பட்டதால் அவ்வித அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிப்பது சாத்தியமாகாதென காரியக்கமிட்டிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது

### பொலிஸ் பந்தோபஸ்து

இன்றைய அரசியல் சூழ்நிலையில மிகமுக்கியமானதாக கருதப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டம் இன்று காலை 10 மணி முதல் பி. ப. 2-30 மணிவரை பலத்த பொலிஸ் பந்தோபஸ்துடன் நடைபெற்றது. அரசியல் அவதானிகளும், பத்திரிகையாளர்களும் எதிர்பார்த்ததுபோல இக்கூட்டம் அவ்வளவு காரசாரமாக இருக்கவில்லையென கமிட்டியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூட்ட மண்டபத்துக்கு காலை 10-40 மணிக்கு வந்து சேர்ந்தார் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்திற்கு அனுமதிக்கப்படவில்லை.

### அமோக ஆதரவு

314 'பேர்களைக் கொண்ட கட்சியின் காரியக்கமிட்டியில், முற்போக்கு சக்திகளுடன் கூட்டு சேர்வது பற்றிய பிரதமரின் மகஜரை நாலு அங்கத்தவர்கள் மட்டுமே எதிர்த்து வாக்களித்தனர். 213 அங்கத்தவர்கள் மகஜரை ஆதரித்து வாக்களித்தனர்; மிகுதியானோர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

(10-ம் பக்கம் பார்க்க)

### இன்று நடைபெறும் முக்கிய கூட்டம்

கொழும்பு, சனி

நாளை நடைபெறவிருக்கும் லங்கா சமசமாஜக் கட்சி மத்திய கமிட்டியின் முக்கிய கூட்டத்தில் சுதந்திரக்கட்சியின் காரியக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட முடிவு பற்றி ஆராயப்படும் என நம்பப்படுகிறது.

இன்று சமசமாஜக் கட்சி மத்திய கமிட்டியின் ஆரம்ப கூட்டம் நடைபெறுகிறது. நாளைய தினமே கூட்டரசாங்கத்தில் சமசமாஜக் கட்சி சேர்ந்து கொள்வது பற்றிய பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும்.

### விமானம் நொறுங்கியது 44 பேர் மரணம்

நியுயோர்க், மே. 9

கலிபோர்னியாவில் ஒரு விமானம் விழுந்து நொறுங்கியதால் 44 பேர் மரணமானார்கள். விமானமோட்டிகள் இருவரும் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதால் இதுபற்றி விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

### பஸ் மூலம் சாராய விற்பனை!

துணுக்காய், சனி

இப்பகுதி பஸ் சேவையில்கடமைபுரியும் சாரதி, கண்டக்டர் ஆகியோர் இங்குள்ள கடைகளுக்கு சாராயம் விநியோகித்து வருகிறார்கள். இச் சாராயம் பளையில் கொள்முதல் செய்யப்பட்டு இங்கேஉள்ள ஒவ்வொரு கடைக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன!

### தனியாக சேர்வதில்லை

கொள்ளுப்பிட்டி, சனி

அரசாங்கத்துடன் கூட்டு சேர்வதானால் ஐக்கிய இடதுசாரி முன்னணி ஒன்றாகவே சேரும் எனவும், சமசமாஜக் கட்சியோ, கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது மக்கள் ஐக்கிய முன்னணியோ மற்றககட்சி

(10-ம் பக்கம் பார்க்க)

## ஜவுளி வர்த்தகம் தேசியமயமாக்கப்படும்

### உதவிமந்திரி உறுதி

தெஹிவளை, சனி

இங்கு, விற்பனவு இலாகாவின் சில்லறைக் கடையொன்றைத்திறந்து வைத்த விவசாய, உணவு, கூட்டுறவு அமைச்சரின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. ஆர் எஸ். பெரேரா, துணி வர்த்தகம் விரைவில் தேசியமயமாக்கப்படுமென்று தெரிவித்துள்ளார்.

இவ்வைபவத்தில் திரு. பெரேராஉரை நிகழ்த்துகையில். துணி வர்த்தகத்தை அரசாங்கம் பொறுப்பேற்பது சம்பந்தமான மசோதாவொன்று விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும் என்றும் இதன்மூலம், புறக்கோட்டையிலுள்ள "பெரிய முதலாளிகள்" மக்களை ஏமாற்றுவது தவிர்க்கபபடுமென்றும் கூறினர்.

"ஜவுளி வர்த்தகத்தை தேசியமயமாக்குவதால்,

(10-ம் பக்கம் பார்க்க)

## சர்வாதிகாரம் பற்றிய புகார் கண்டுபிடிக்கப்படவில்லை

### பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வெளியிட்ட அறிக்கை

கொள்ளுப்பிட்டி, சனி

மந்திரிகள் சிலர் சர்வாதிகார ஆட்சி நடத்த திட்டமிடுகிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயகா செய்துகொண்ட புகார் கண்டுபிடிக்கப்படவில்லை என்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது.

மந்திரிகள் சிலர் சர்வாதிகார ஆட்சிக்குதிட்டமிடுவதாக தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸாரிடம் திரு. டட்லி சேனநாயகா புகார் செய்தார். இதைத் தொடர்ந்து சி. ஐ. டி. பொலிஸார் மந்திரிமார்களை விசாரணை செய்ததாகவும் அபபடியெதுவும் நடைபெற்றதாக கண்டுபிடிக்கபபடவில்லை எனவும் அந்த அறிக்கையில் கூறபபட்டுள்ளது சர்வாதிகார திட்டம் பற்றி தனக்கும் யாரோ கூறியதாக டாக்டர் என்.எம். பெரேரா தன்னிடம் கூறியிருந்தார் என திரு. டட்லி சேனநாயகா மார்ச் 23ந் திகதி சி. ஐ. டி. பொலிஸாருக்கு கொடுத்த வாககு மூலத்தில் தெரிவித்தார் எனவும் ஆனல் டாகடர் என். எம். பெரேராவை சி. ஐ. டி யினர் விசாரித்த போதுதான் அவ்விதம் டட்லியிடம் கூறவில்லை என அவர் தெரிவித்ததாகவும் அறிககையில்கூறப்பட்டுள்ளது

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

BAYER

பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்
FOLIDOL METASYSTOX
கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

# இந்த வாரம் உங்கள் இராசி பலன் எப்படி ?

"அத்திரி" எழுதுகிறார்

[10-5-1964 தொடக்கம் 16-5-1964 வரை]

### மேடம்

(அஸ்வினி,, பரணி, கார்த்திகை 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) உங்கள் தொழிலில் சிறிது அபிவிருத்தியடைய இந்தவாரம் சந்தர்ப்பங்கள் ஏற்படும். அதிக ஆசைப்பட்டீர்களானால் மிகவும் மனவருத்தமடைவீர்கள். கையில் கிடைக்கும் பணத்தை வைத்துக் கொண்டு அதற்கு தகுந்தமாதிரி செலவுசெய்தால் சுகமடைவீர்கள். இந்த வாரத்தில் நீங்கள் ஆசைப்பட்ட பொருளொன்று உங்கள் கைக்கு வந்துசேரும். நீங்கள் எடுத்த முயற்சிகள் இந்த வாரத்தில் கைகூடக் கூடிய சந்தர்ப்பங்கள் தென்படும். நீண்ட கடிதமொன்று இந்தவாரமத்தியில் வந்துசேரும்.

### இடபம்

(கார்த்திகை 2,3,4-ம் பாதங்களிலும் ரோகிணி,மிருகசீரிடம் 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) பிரயாணங்களிலும், சந்தோஷமான காரியங்களிலும் பணம் செலவழிக்கத் தயங்கினீர்களானல் அது பெரிய முட்டாள்தனமாக இருக்கும். உங்களுடைய திட்டங்களிலும் தொழில்விவகாரங்களிலும் துணிந்து முன்னேறுங்கள். அதனல் சுகமடைவீர்கள். சினேகிதர்களையும் சொந்தக்காரர்களையும் போய் சந்திக்கத் தயங்காதீர்கள். அவர்களைச் சந்திப்பதினல் இந்த வாரத்தில் பலநன்மைகளுண்டு. தொழிலினல் ஆறுதல் குறைந்து ஆறுதல் எடுக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி உணருவீர்கள்.

### மிதுனம்

(மிருகசீரிடம் 3,4-ம் பாதங்களிலும், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) புதுமனையொன்றிற்கு பிரவேசிப்பதைப் பற்றியோ அல்லது உங்கள்மனையைத் திருத்துவது பற்றியோ அக்கறை எடுப்பீர்கள். இதற்கான வழிவகைகளை ஆலோசனை கூறுபவர்களின் நச்சரிப்புத்தாங்காமல் அவலப்படவும் நேரிடும். அடுத்த சனிக்கிழமை வரை பிரச்னைகள் ஒன்றையும் தீர்க்கமுடியாமல் திண்டாடுவீர்கள். அதன் மேல் நிலைமை சிறிது சிறிதாக மாறி நிம்மதியாக இருக்கும். உங்களுடன் ஒத்துழைக்கத் தவறிய வேலையாட்கள் இந்த வார இறுதியில் மனம்மாறி அனுகூலமாயிருப்பார்கள்.

### கடகம்

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியத்தில் ஜனனமானவர்களுக்கு) மிகவும் கஷ்டமான நிலைமைகள் ஏற்பட்டாலும் அல்லது மனம்தளரக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டாலும் கவலைப்படாமலிருங்கள். உற்சாகத்தைக் கைவிடாமலிருங்கள். உங்களுடைய சொந்த விஷயங்களுக்கு மாத்திரமன்றி மற்றவர்களுக்குமாக கடுமையாக உழைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். வருகிற வெள்ளிக்கிழமை சீரடைவதைப் பார்த்து மகிழ்வீர்கள். பலவிதமான சந்தோஷ நிகழ்ச்சிகளும் உற்ருரின் வருகையும் உங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும்.

### சிங்கம்

(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) உங்களுடைய காரியங்களை உற்சாகமாகச் செய்யக்கூடிய மனேநிலைமையுடையவராக இருப்பீர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் அதிக உற்சாகம் காட்டுவீர்கள். எல்லாவிதமான பொருள் வசதிகளும் உங்களுடைய கண்முன் கொண்டுவந்து நிற்பாட்டப் பட்டிருக்கும். ஆனல் மிகவும் பிரயாசையுடன் அதை அடைவீர்கள். வீணக மனதை அலட்டி மற்றவர்களையும் கவலைக்கிடமாக்கி வைக்காதீர்கள். எந்த காரியமும் சுலபமாகத் தீரும்.

### கன்னி

(உத்திரம் 2, 3, 4-ம் பாதங்களிலும், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இந்தவாரத்தில் நாட்கள் போகப்போக முன்னேற்றமும் சந்தோஷமும் உங்களை எதிர்நோக்கியிருப்பதை உணர்வீர்கள். நீங்கள் பல காலமாக எதிர்பார்த்திருந்த பணம் இந்த வார இறுதியில் உங்கள் கைக்கு வந்துசேரும். பழைய சினேகிதர் ஒருவர் உங்கள் வாழ்க்கையில் திரும்பிவந்து சேருவதின் மூலம் மகிழ்ச்சியடைவீர்கள். பழைய நட்புறவுகளைப் பலப்படுத்த முயற்சி செய்யுங்கள். இந்த நட்புறவு பலவிதமான உதவியையும் சந்தோஷத்தையும் கொடுக்கும்.

### துலாம்

(சித்திரை 3, 4-ம் பாதத்திலும், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரத்தில் பலருடைய கோரிக்கைகளையும் பிரச்னைகளையும் சமாளிக்க வேண்டிய நிலைமைகள் ஏற்படும். இந்தவாரத்தில் மற்றவர்களுக்கு உதவி செய்யும் வாய்ப்பையும் புகழையும் பெறுவீர்கள். வயதில் முதிர்ந்தவர்களுடைய தலையீட்டினல் உங்களுடைய நிலைமை தர்மசங்கடத்துக்குள்ளாகும். பணவிஷயத்தைப் பொறுத்த வரையில் உங்களுக்கு மிகவும் அநுகூலமாயிருக்கும். நீங்கள் பொறுமையைக் கடைப்பிடித்தால் தாமதத்தில் பண உதவிகள் வந்துசேரும்.

### விருச்சிகம்

(விசாகம் 1, 2; 3 -ம் பாதத்திலும், அனுஷம், கேட்டையிலும் ஜனனமானவர்களுக்கு) வார ஆரம்பத்தில் சலிப்புத்தட்டக்கூடிய சூழ்நிலைகள் உங்களுக்கு ஏற்படக்கூடும். நீங்கள் வீணக மனத்தாழ்வான எண்ணங்களைச் சிந்திக்கப் பார்ப்பீர்கள். எதற்கும் உற்சாகமா இருந்தால் காரியசாதனை செய்யலாம்.

### தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரம் முழுவதும் கடுமையாக உழைப்பீர்கள். உங்களிடம் பொறுப்பாகக் கொடுக்கப்பட்ட வேலைகளை செய்து முடிப்பீர்களோ என்ற சபலம் தட்டப்பார்க்கும். காலம் நேரம் போவது தெரியாமல் செயலாற்றிக் கொண்டிருப்பீர்கள். உங்களுடைய அபிலாஷைகளைப்பூர்த்தி செய்ய மிகவும் கஷ்டபபட்டு உழைக்கவேண்டியிருக்கும். சொந்தக்காரர்களும் நண்பர்களும் மிகவும் உதவியாக இருப்பார்கள். நீங்கள் அதிகம் கவலைப்படத் தேவையில்லை.

நீங்கள் பலகாலமாக எதிர் பார்த்துக் கொண்டிருந்த சில காரியங்கள் வார முடிவில் கைகூடும். பெரியோர்களின் உதவியால் நீங்கள் சுகமடையக் கூடும். ஆனல் உங்களிலும்பார்க்க சிறியவர்கள் உங்களுக்குப் பலவிதமான தொல்லைகளைத் தருவார்கள்.

### மகரம்

(உத்திராடம் 2, 3, 4-ம் பாதங்களிலும், திருவோணம், அவிட்டம் 1,2-ம்பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரத்தில் நீங்கள் தொட்டகாரியங்கள் மிகவும் சுலபமாக நடைபெறுவதை உணர்வீர்கள். உங்கள் சூழ்நிலையில் உங்கள் திட்டங்களை மாற்றவும் உங்கள் முன்னேற்றத்தை முறியடிக்கவும் ஆக்கள் இருக்கிருர்கள். அவர்களைப் பற்றி மிகவும் கவனமாக இருங்கள். உங்களிடம் மனேதைரியம் இருந்தால் எந்தவிதமான சங்கடங்களையும் பொருட்படுத்தாமல் காரியங்களைச் சாதிப்பீர்கள். சனிக்கிழமை உங்களுக்கு அநுகூலமானநாள்.

### கும்பம்

(அவிட்டம் 3, 4-ம் பாதங்களிலும், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம்பாதங்களிலும்ஜனனமானவர்களுக்கு) உங்களை நோக்கி மகிழ்ச்சியான சம்பவம் ஒன்றிருப்பதை இந்தவாரத்திலுணர்வீர்கள். வார ஆரம்பத்தில் குடும்பத்துக்குள்ளும் நண்பர்களிடையேயும் வீண் வாக்குவாதங்களும் மனஸ்தாபங்களும் ஏற்பட்டாலும் சனிக்கிழமையளவில் நிலைமை சுமுமாக வந்துவிடும். பணவிஷயத்தைப் பொறுத்தவரையில் குழப்பநிலைகளிருந்தாலும் போகப் போகப் பின்னுக்கு நிலைமை சீரடைந்துவிடும். வெள்ளிக்கிழமையளவில் கொக்கல் வாங்கல் செய்ய நல்லது.

### மீனம்

(பூரட்டாதி 2,3,4-ம் பாதங்களிலும், உத்திரட்டாதி, ரேவதியில் ஜனனமானவர்களுக்கு) பிரயாணத்துக்கு ஏற்பாடுகள் செய்தபின் மனம் மாற்றமடைந்து அதைக்கைவிடுவீர்கள். பணவருவாய்க்கு சாதகமான சூழ்நிலைகள் வாரஇறுதியில் ஏற்படும். உங்களுடைய செலவினங்களுக்குத் தகுந்த பணவரவு இந்த வாரத்தில் ஏற்படும். சிநேகிதர்களிடையே ஏற்படும் சச்சரவுகளில் நீங்கள் தலையிட்டு சமரசஞ்செய்து வைக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் இந்த வாரத்தில் ஏற்படும். புதன்கிழமை உங்களுக்கு அநுகூலமானநாள்.

# நமது நூல் நிலையம்

சுத்தானந்த கீர்த்தனாஞ்சலி: 1015 பாடல்கள் விலை ரூபா: 5)

முத்தமிழின் ஒன்ருன இசைத் தமிழின் பிரிவை மேற்படி நூல் அமைகின்றது. இசைத் தமிழ்நூல் அருகியுள்ள இக்காலத்தில் சுத்தானந்த கீர்த்தனஞ்சலி என்ற நூல் ஒரு வரப் பிரசாதம் என்றே கூறவேண்டும். பதினன்கு வகையாக பொருளடக்கத்தில் சமயோகசாரம் அமைய அப்பாடல்கள் அழகுபெறுகின்றன. இசைத்தமிழ் வாணர்கள் தம் கலைவாழ்வைக் கண்ணியப் படுத்திக் கொள்வதற்கு இந்நூல் நன்குஉதவிசெய்யும் என்பதில் ஐயமின்று. பாரதியார் தமிழ்மொழியில் மட்டுமன்றி சமஸ்கிருதம் இந்தி முதலான பிறமொழிகளிலும் கீர்த்தனை இயற்றியுள்ளார். அவைகளையும் இசையுலகு பாடி மகிழ்வதாக.

நா. சி.

* * *

### நடனஞ்சலி, முன்னேற்ற முழக்கம்

நடனஞ்சலி, முன்னேற்ற முழக்கம் என்ற இரு கவிதை நூல்கள் எமது பார்வைக்குக் கிடைத்தன. இவை கவியோகி சுத்தானந்த பாரதியாரால் இயற்றப்பட்டுச் சுத்தானந்த நூலகத்தால் வெளியிடப்பட்டவை.

நடனஞ்சலி என்றநூல் பரத நாட்டியத்தின் பல்வேறு முத்திரைகளைக் காட்டும் படங்களைக் கொண்ட மேலட்டையுடன் அழகாகப்பதிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் கீர்த்தனங்களாகவும், சிந்துகள், தெம்மாங்குகள், கண்ணிகளாகவும் பல்வேறு இசைப்பாடல்கள் விளங்குகின்றன. இப் பாடல்கள் 15 தலையங்கத்துள் அடக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலும் நடனத்துக் கேற்ற வகையில் இராக தாள அமைதியுடன் விளங்குவதால் நடனம் பயிற்றும் ஆசிரியர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும்.

தமிழ்மக்கள் நடனம் பயிலும் போது தகுந்த இசைப்பாடல்கள் இன்மையால் வேற்று மொழிப் பாடல்களைப் பயின்று நடனமாடுகிருர்கள். அதனல் நடனத்தின் பொருள் விளக்கம் குறைகிறது. இது தமிழர்க்குள்ள பெருங்குறை. இக்குறையைக் கவியோகியார் ஓரளவு தீர்த்து வைத்துள்ளார் என்றே கூறவேண்டும். இந்நூலிலுள்ள 188 பாடல்களும் இனிய சந்தமும், செந்தமிழும் கொண்டு சீரிய முறையில் அமைந்துள்ளன நடனங்களின் பல்வகை நிலைக் கேற்பவும், உணர்ச்சிக்கேற்பவும் அமைந்த பல பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றிருப்பது நடன விருப்பினர்க்குக் கிடைத்த தமிழ்ப் புதையல் என்றே கூறவேண்டும். காவியங்களில் வரும் அழகிய காட்சிகளை இசைப்பாடலாக அமைத்து அவற்றை நடனத்திற்காட்டும் போது அந்நடனம் பொது மக்களைப் பெரிதும் கவர்ந்து விடுகிறது. அத்தகைய இனிய காட்சிகள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

கம்பன் அமைத்த சொற் சித்திரக்காட்சி அழியாத வகையில், இந்நூலில் இராமாயணக்காட்சிகள் சில, நடனத்துக்கேற்ற இசைப்பாடலாய் அமைந்துள்ளன. உங்கள் ரசனைக்கு ஒருபாடல்:

அசோக வனத்தில் சீதையின் காலடியில் வீழ்ந்து இராவணன் இரக்கும்காட்சியொன்று கம்பராமாயணத்திலுள்ளதை நேயர்கள் அறிவார்கள். அக்காட்சியை காவியரசனை கெடாமல் கவியோகியார் அமைத்துள்ளார்.

இராவணன்:

மூவுலகின் ஒரு நாயகன்
- தீரா
மோகங் கொண்டுன்னடி
தாழ்ந்தனன்
ஏவும் பணிகளைச் செய்
கின்றேன் - சற்றே
என் முகம் பார்த்தருள்
சீதையே.

சீதை:

சீதையில்லையுன் குலத்
தினைச் - சுடும்
தீயென்றென்னையறி
தீயனே - காமப்
போதை கொண்டாய்
தலை பத்துமே - சிந்தப்
புத்திகெட்டிப்படிச்
செய்தனை.

இப்பாடல்களிற் கம்பனைப் படிக்கும் எண்ணந் தோன்றிக் கருத்தைக் கவர்கின்றது.

ஜீவநடனம் என்ற பிரிவிலே உயிர்க்குறுதிபயக்கும் பலகருத்துக்களைப் புகுத்தி இனிய பாடல்களைத் தந்திருக்கிருர் கவிஞர்.

"அலறிப்போனனே - ஆண்
பிள்ளை
ஆண்டு தவறுமல் அவளுக்
குப்பிள்ளை
ஆறுக்கு மிஞ்சியே ஏறுது
சன்னை - (அலறி)
சரணம்
மெயில் வண்டிக்கும் பலே
வீடு - அதன்
மேலே மனைவி பசுங்கொடி
யாடும்
ஒயில் நடையுடையணி
யழகு - இவன்
ஒட்டாண்டியாக உறவுகள்
பழகும்;

என்று கூறும் இப்பாடல் ஜீவநடனப்பகுதியில் அமைந்து குடும்பக்கட்டுப் பாடில்லாத் தொல்லையை விரித்துக்காட்டி எம்மை உணரவைக்கிறது.

இப்படி அநேக பாடல்களைக் கொண்ட இந்நூல் அழகிய அமைப்பில் தெளிந்த அச்சில் வெளிவந்துள்ளது. கையடக்கமான பதிப்பு. நடன ஆசிரியர்களும், இசைப்பாட்டு விருப்பினரும் என்றும் ஏத்திப் போற்றக்கூடிய இனிய நூல். விலை ரூ. 2-00. சுத்தானந்த நூலகம், யோக சமாஜம், அடையாறு—சென்னை-20.

★

முன்னேற்ற முழக்கம் என்ற நூலில் பல முன்னேற்றக் கருத்துக்கள் கவிதை வடிவிற் கிடக்கின்றன. தமிழ், சமயம், சமரசம் ஆகிய பெரு விடயங்களில் தமிழர் முன்னேற வேண்டுமென்ற பேராவலுடன் முழங்கும் 126 பாடல்கள் இந்நூலிலுள்ளன. கவியோகியார், அன்பு, யோகக் காட்சி பற்றிய கருத்துகளைத் தெளிவுறக்கூறும் பெரியார் என்பதை யாவரும் அறிவர். சுப்பிரமணிய பாரதியாரின் தேசபக்திப்பாடல்கள் கூறுவதையே கவியோகியாரும் கூறினும் கருத்துகள் பல வகையாகத் தொகுத்தும் விரித்தும் கூறப்பட்டுள்ளமை இந்நூற்சிறப்பாம். சமயக்கருத்துகள், பாரதியாரின் வேதாந்தப்பாடலைப்படிக்கும்போதேற்படும் உணர்ச்சியை உண்டாக்குகின்றன. சில கருத்துகளில் கவியோகியாரின் கவிபுனையுமாற்றல் சிறந்து நிற்பதைக்காணலாம்.

தொழிற்கும்மி என்ற பிரிவில் ஒரு பாடல்:

பாடுபட்டோருக்குத்
தேடி வரும் - பலன்
பாடப் பாட ராகங்கூடி
வரும்

(4-ம் பக்கம் பார்க்க)

ஜாதகபலன்

இலவச ஜாதக பலன் விபரமறிய, புதிய 10 சதம் தபாற்தலையுடன் எழுதுங்கள்: மேலைப்புலோலி நூல் நிலையம், பருத்தித்துறை, (இலங்கை). Melaippuloly Noolnilayam, Point Pedro, (Ceylon).

300

எப். ஜீவாஜி அன்ட் பிரதர்ஸ்

தாள், அச்சடிக்கும் மை, உபகரணங்கள், சகல பாடசாலைப் புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள், பெற்ரோமாக்ஸ்- பெற்ரோமாக்ஸ் உப உறுப்புக்கள் முதலியவற்றிற்கு மொத்த,சில்லறை விற்பனையாளர்கள்.

தொலைபேசி: 7126

இல. 9 & 11, ஜுபிலி பசார், (ராணி தியேட்டருக்கு அருகாமை) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# தேடியுந் திரிந்துங் காண வல்லரோ!

— கு. உமா மகேஸ்வரன் —

உணவுக்கு ஆறு சுவைகள். ஆனால் உணர்வுக்கோ ஒன்பது சுவைகள். ஒன்பதிலும் ஒப்பில்லாததாய் உயர்ந்து விளங்குவது நகைச்சுவை. நகைச்சுவை இல்லாதவன் நாற்கால் விலங்குதான்; சந்தேகமில்லை. நகைச்சுவை மட்டும் இல்லையென்றால் நான் என்றோ தற்கொலை செய்துகொண்டிருப்பேன் என்று மகாத்மாகாந்தி கூறியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. நகைச்சுவை சிரிப்பூட்டுவதோடு சிந்திக்கவும் செய்யுமாயின் உயர்ந்தரகத்தைச் சேர்ந்ததாகும். மகான்களுடைய நகைச்சுவை இந்தரகத்தைச் சேர்ந்தது. அவர்கள் தம்மையும் உலகையும் பார்த்துச்சிரிப்பார்கள். அவர்கள் நகைச்சுவை நம்மைச் சிரிப்பூட்டுவதோடு அமையாது சிந்திக்கவும் வைத்துவிடும். நாவுக்கரசு சுவாமிகளுடைய நகைச்சுவையும் இந்தவகையைச் சார்ந்ததாகும்.

அடியும் முடியும் தேடி அயனும் அரியும் அலுத்த கதை அனைவரும் அறிந்ததே. அந்தக் கதையைப் படித்த புலவர் ஒருவருக்குச் சிரிப்புப் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. எத்தகைய முட்டாள்சன் இந்தப் பிரமாவும் விஷ்ணுவும். அடியையும் முடியையுங் காண இத்தனை அல்லல்பட்டிருக்கத்தான்வேண்டுமா? ஒருவர் பன்றியாகிப்பூமியைக் குடைந்தாராம். மற்றவர் அன்னமாகி ஆகாயவெளி கடந்தாராம். இத்தனை சிரமம் எதற்கு? பேசாமல் பரவை வீட்டுவாசற்படியாகக் கிடந்திருக்கலாமே. பரவைவீட்டுக்கு ஒருதரமா தூதுபோனார் சிவன்? மூன்றுதடவைபோனார். ஒவ்வொருமுறையும் வாயிற்படியைக் கடக்கும்போது தாளினை உயர்த்தியும் தலையைத் தாழ்த்தியும் அன்றோ அவர் சென்றிருப்பார். ஒருதரம் அடியையும் முடியையும் கண்டாலே போதும் என்று ஆலாய்ப் பறந்தவர்கள் அப்பொழுது வேண்டிய மட்டும் பார்த்திருக்கலாமே! அயனினதும் அரியினதும் அசட்டுத்தனத்தை நினைக்க நினைக்க புலவருக்கு எழுந்த சிரிப்பைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. சிரித்துக்கொண்டே அவர் பாடிய பாட்டு இது:

ஆனா ரிலையே
அயனுந் திருமாலுங்
காணார் திருமுடிமுன்
காண்பதற்கு—மேனாள்
இரவு திருவாரூரில்
எந்தைபிரான் சென்ற
பரவைதிரு வாயிற் படி.

நாவுக்கரசு சுவாமிகளுக்கு அயனினதும் அரியினதும் அசட்டுத்தனம் தெரியும். ஆனால் இந்தப் புலவரைப்போல் பரவை திருவாயிற்படியாகப் போயிருந்தால் அடியையும் முடியையுங் காணலாம் என்று சொல்வது அவருக்குச் சம்மதமில்லை. அயனையும் அரியையும் போல இந்தப் புலவரும் அசடர்தான் என்று முடிவு கட்டிவிடுகிறார் அவர். அயனும் அரியும் பரவை திருவாயிற்படியாக மாறியிருநதால் மட்டுமல்ல கஜகர்ணம் கோகர்ணம் போட்டிருந்தாலும்கூட பரமனது அடியையும் முடியையும் கண்டிருக்க முடியாது. ஏன்? அதற்குக்காரணத்தையும் அவரே கூறுகிறார்.

நாடி நாரணன்
நான்முகன் என்றிவர்
தேடியுந்திரிந்
துங்காண வல்லரோ
மாடமாளிகை
சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென்
நெஞ்சு ளிருக்கவே.

அம்பலத்தாடியின் பாதங்கள் அப்பரடிகளின் நெஞ்சப் பேழைக்குட் பத்திரமாக இருக்கும்போது நான்முகனும் நாரணனும் தேடியென்ன? ஓடியென்ன? காண்பதென்பது கனவிலும் நடக்காத காரியமாயிற்றே என்று நகைக்கிறார் நாவுக்கரசர்.

சிரிப்பூட்டுவதுடன் நின்றுவிடவில்லை திருநாவுக்கரசர்; சிந்திக்கவும் வைக்கிறாரென்பது கவனிக்கத் தகுந்தது. நாரணனுக்கும் நான்முகனுக்கும் மட்டும் அவர் சொல்லவில்லை. உலகத்துக்கே சொல்லுகிறார். "கோவிலுக்கும் குளத்துக்கும் ஓடி கடவுளைத் தேடி அலுக்காதீர்கள். உள்ளத்தில் இல்லாதவரை அவனை உலகிலே தேடிப் பயனில்லை."

# ஷேக்ஸ்பியர் துயிற் புலம்பல்

துயிலே! இனிய துயிலே! அன்புடன்
இயற்கையிற் றோன்றிய இனிய நற்றாயே!
இனி எப்பொழுதும் என் இமைகளைப் பொருத்தி,யான்
நிர்ச்சிந் தனையா நித்திரை கொள்ள
திருக்கச் செயநினை வெருட்டிய தெங்ஙனம்?
பெரும்பொருள் படைத்த பெருமகார் தமது
மணம் மிக ஊட்டிய மாளிகைக் கண்ணே,
விலை மதித் திடவொணு விதானத்தின் கீழ்
இன்னிசைக்கீதம் இசைத்திடச் சயனிலா
ததி புகை மண்டிடும் அற்பக் குடிசையில்
மெய்யெலாம் வருத்தும் வெய்ய புன் பாடலில்
செவிக்கண் கொசுகினம் சில் தாராட்டிட
அடங்கி முடங்கிக் கிடப்பதென்? துயிலே!
வந்த தேவதையே! மன்னவர் அமளியை
விழித்துக் காப்பவர் வீடே யாகவும்
எச்சரித்திடும் பணி என்னவும் ஆக்கி
அருவருக்கத் தரும் அமளியின் பேரில்
ஏழைகளுடன் நீ ஏன் அமர்ந்திடுவை?
பார்க்கச் சுழற்றுயர் பாய் மரம் தன்னில்
மேல் இருக்கும் சிறு மாலுமி கண்களை
இறுகப் பொத்தி இன்னவன் புத்தியை
அடங்கா முரட்டலையாம் தொட்டிலில், அம்
முரட்டலை தன்னை முகடுறப் பற்றி
முறுக்கிச் சுருட்டிச் சறுக்கு நூலேணியில்
நடுவன் எழுப்பிடும் நாதமே போன்று
காதடைத் திடுபெரும் கம்பலை யுடனே
தூக்கிச் சொருகிடும் தாக்கும் வளிதனின்
ஆக்கினைக் கெல்லாம் அவன் உள்ளாகியும்
ஆட்டிக் குலுக்கி அமர்ந்திடச் செய்வையே!
சமநிலை தன்னிற் சார்ந்திடாத் துயிலே!
அச்சம் விளைத்திடும் அந் நேரத்திலும்
பனி மழை நீசினில் நனை மாலுமி தனக்
காறுதல் அளித்தெல்லாம் அடங்கிய நடுநிசிப்
போதினில் சுகந்தர ஏதுவாயுள்ள
வசதிகள் யாவும் வாய்த்தும் மன்னவற்கு நீ
சயனப் பேறு தராதது சரியோ?
மகுடம் தரித்திடும் மன்னவர்க் கின்னலாம்
ஆதலின், தாழ்நிலை அடைந்துளீர்! நீவிரே
மேதகு சுகத்துயில் மிகமே வுதிரே.

("அரும்பொருட்டிரட்டு" என்னும் நூலில் இருந்து அனுப்பியவர்: திரு. வை. முத்துக்குமாரசுவாமி.)

# பெய்யெனப் பெய்யும் மழை

— வரணியூர் பண்டித வித்துவான் ஆ. சின்னத்தம்பி —

அன்பிற்றிளைத்த அரிய குடும்பம்; ஆனால், தான் தேடி உண்ணலும் தருமஞ் செய்தலுமே தகுதியுடையார் இயல்பு; பண்டைத்தமிழ்ப் பெருமக்கள் இயல்பு. "ஆம்பொருள் நமதேயானால் அறம் பிறர்க்காவதுண்டோ" என அறத்தின் பெற்றி நோக்கிப் பழம் புதையல் மிக இருப்பினும் அரும் பொருளீட்டி வாழ்ந்தனர். அதனால் பொருளீட்டவேண்டுமே, இல்லறம் ஒழுங்காக இடையூறின்றி இனிது முடியவேண்டுமே, என எண்ணுகின்றான் தலைவன். எண்ணி, பொருளீட்ட செல்லவேண்டும் என ஆயத்தம் செய்கின்றான் ஆனால் இவையொன்றையும் தலைவியறியாள். இதனைக்குறிப்பாக அறிகிறாள்தோழி. அப்போழ்து தோழியின் உள்ளம் தலைவியை நோக்கி அவலப்படுகிறது. தலைவனை அணுகினாள். ஐயகோ! என்ன செய்தனை? நின் செயலை நின் தலைவி ஆற்றியிருப்பாளா? அவள் இயல்பை நீ இன்னும் அறிந்திலைப் போலும்?

"படையமை சேக்கையுள்
பயிலினறியாய் நீ
புடைபெயர்வாயாயினும்
புலம்பு கொண்டினைபவள்

நனிகொண்ட சாயலாள்
நயந்து நீ நகையாகத்
துனிசெய்து நீடினும்
துறப்பஞ்சிக் கலுழ்பவள்"

நின்... அருளுக்கமழியினும் அவலங்கொண்டழிபவள்; இன்னள் நினது ஆருயிர்த்தலைவி; படுக்கையில் ஒருகால் நீ புடைபெயர்ந்து உறையினும் அது பொறுக்காதவளாய் தனது தனிமைக்கு, பிரிவுக்கு வருந்துகின்றவள். அன்றியும் ஒரு போது நீ விளையாட்டாக ஊடி சிறிது நீட்டித்து மறையினும் அப்பிரிவைத் தானும் ஆற்றாளாய் கண்ணீர் மலகக் கலங்குபவள். ஐயகோ! நீ சிறிது விளையாட்டாகச் சினந்த நோக்கம் எய்தவே தாங்கரிய கவலையால் உள்ளம் செயலற்று அழிபவள். இன்னளை நீத்து நீ எண்ணும் காரியம் நன்று! நன்று! எனத்தோழி தலைவியின் இயல்பைத் தலைவற்கு அறிவுறுத்தித் தடுக்கின்றாள். இவ்விடத்து இத் தலைவியின் அன்பின் திறத்தையும் அவள் நிகழ்ச்சியையும் உய்த்துணர்ந்து கற்பின் திறன் எவ்வாறெனத் தெளிமின்!

அடுத்ததோர் அன்பான குடும்பம். தலைவன் பொருள் தேடவேண்டுமென எண்ணம் கொண்டான். அதற்கேற்ற ஆயத்தங்கள்செய்தான். இவன் இயல்பை அவன் சொல்லுதற்கு முன்பாகவே தலைவி குறிப்பால் அறிந்துவிட்டாள்; தலைவனை அணிமிச்சென்றாள்.

"நெடுந்தகாய்!
என்னீர் அறியாதீர் போல
இவைகூறின்
நின் நீரவல்ல... எம்மையும்
அன்பறச் சூழாதேயாற்றி
டைநும்மொடு
துன்பந் துணையாக நாடி
னது வல்ல
தின்பமும் உண்டோ
வுயிர்க்கு"
என்றாள்.

ஆகா! பெரும் தகுதிப்பாடமைந்தவரே! என்னீர்மை அறியாதவர் போன்று இவ்வொறெல்லாம் கட்டுரைத்தீர்கள். உங்களைப்போல என்று எண்ணிவிட்டீர்கள் போலும். தன்னைப்போல பிறரையும் எண்ணுதல் இயல்புதானே. அன்று நின்னிற் பிரியேன்; பிரியின் உயிர்த்தரியேன் என்றீர்கள். இன்று பிரிதற்கு விடை பெறுகின்றீர்கள். இவ்வியல்பினள் என்மனைவியும் என்று எண்ணிவிட்டீர்கள்; அவ்வாறு என்னை எண்ணவேண்டாம். எனக்குள்ள அன்பு கெடுமாறு வினை என்னை ஆராயவேண்டாம். நீங்கள்செல்லும்வழியில், உங்களுக்கு ஏற்படும் வழியிடைத்துன்பத்துக்குத் துணையாக என்னைக் கூட்டிச் செல்லுங்கள்; அதுவே எனக்கின்பம். தங்களைப் பிரிந்து தனித்து வாழும் என் இல்ல வாழ்வு, பஞ்சணை மேவிய படுக்கை, பணிமொழியார் பகர்ந்தூட்டும் அறுசுவையுண்டி இவையாவும் எனக்குத் தாங்கரிய துன்பம் விளைப்பனவாகும் என்று கூறுகின்றாள். அவள் அன்பின் திறனை ஆராய்மின்!

இனித்தலைவன் தான் தலைவியிடத்து எத்தகையனோ என அறிகுவாம்.

"சொற் பாலமுதிவள்
யான் சுவை யென்னத்
துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வம்
தந்தின்று நானிவளாம்
பகுதிப்
பொற்பாரறிவார் புலியூர்ப்
புனிதன் பொதியில்
வெற்பில்
கற்பாவிய வரை வாய்க்கடி
தோட்டகலைவகத்தே"

எனத்தலைவியைக் கூடிய தலைவன் கூட்டத்தின்பம் கூறுகின்றான். அமுதமும் அதன் சுவையும் ஒன்றினொன்று பிரிபடாத தன்மைபோன்று, தலைவியும் தானும் வேறல்லர் ஒன்றே என்கிறான். அப்போது தலைவன் தலைவியிடத்துக்கொண்ட அன்பின் பெருக்கமும் அதனால் அரிவன் ஒன்றித்த உணர்ச்சியும் காண்பாம்.

ஓரோஓகை தம்முட்டழீஇ
யொரோ ஓகை
ஒன்றன்கூறுடை யுடுப்பவரே
யாயினும்
ஒன்றினர் வாழ்க்கையே
வாழ்க்கை"

அன்றோ? உண்ண உடுக்க வழியற்ற நிலையிலும் உள்ளதே போதுமென்று உவகையோடு உள்ளம் நிறைந்து கூடி வாழ்தலே வாழ்க்கை. இவ்விடத்து இதனைத் தமயந்தி வரலாறு புலப்படுத்துகின்றது. நளன் நாடு நகரம் எல்லாம் இழந்து வெறுங்கையனானான். அப்போதும் தமயந்தியுள்ளம் நளனையே கூடிநின்றது; பிள்ளைகளைத்தானும் பெட்புற்றாளல்லள். காட்டு வழியில் அன்னப்பறவையை அகப்படுத்தவேண்டித்தனது ஆடையைப் பறிகொடுத்த நளனுக்குத்தன்னுடை பாதியினை ஈந்து தயக்கமின்றி உடன் வாழ்ந்தாள். இஃதன்றோ பெண்மையறம். இன்னர் கற்புடைமகளிர் ஆதலின் அன்றோ தன் கணவன் உயிர்நீத்த அக்கணமே தாமும் உயிர் நீத்து கூடியின்புற்று என்றும் பிரியாநிலையெய்துகின்றனர். அன்றேல் தன்னுடலை வலிந்து நீத்தேனும் தலைவனைச் செறடைய முனைகின்றனர். அன்றியும் தனது தலைவனுக்கு முறையின்றியாரும் இடர்செய்வார்க் காணின் தாமே ஆண்மைகாட்டி அஞ்சாமை மேற்கொண்டு அறவழியில் தம் கணவனைப் பேணுவர்; இவ்வியல்பைக் கண்ணகி வரலாற்றானறிக. அன்பின் வலிமைதான் என்னே? அன்பிலே வலியுறுத்திப் பேணுவது பெண்மையன்றோ? அன்பின் வழியது உயிர்நிலை. என்போடியைந்த தொடர்பு அன்போடியைந்த வாழ்க்கையாம். ஆகவே பெண்ணானவள் தன் கணவனே கடவுள் என்றும், அவன் பணி செய்தலே தன் கடமையென்றும், தானே தன் மனதில் உணர்ந்து செய்யவேண்டும். இவ்வாறுய உணர்ச்சி, தன் நாயகனிடத்துண்டான அன்பினால் எய்திய இன்பந்துய்த்தலான் ஏற்படும் உள்ளநிறைவினால் வருவதாகும். இந்நிலையில் பெண்ணானவள் இல்லக்கிழத்தியென்கிற உயர்ந்த நிலையில் வாழ்கின்றாள்.

இந்நிலையுடையாள் ஒரு தலைவி, தலைவன் கட்டளைக்கு அஞ்சிப் பணியாற்றுபவள் அல்லள் என்பது வெளிப்படை. தலைவன் குறிப்பறிந்து தாமே முனைந்து கடமையாற்றுவாள். தனது தலைவனுக்கு இதமான வழிகளைத் தெரிந்து, தெளிந்து, அவனிடத்துக் கொண்ட அன்பின் சின்னமாகவே பணியாற்றுவாள். தனது கணவன் உள்ளத்தில் குறைபாடுகள் நேரினும், அக்குறைகளைத் தனது கலங்கா நிலைமையால் ஆற்றியளிப்பாள். ஆனால், தலைவன் தனது ஆருயிர் கிழத்தியின் உள்ளத்துக்கிசைய ஒழுகக் கடவன். தலைவன் ஒன்று சொன்னால், அது இவ்வுலகில் போற்றத்தக்க யாவற்றினும் மேலானது என எண்ணும் பான்மை இயல்பாகவே உடையவளாகிப் போற்றுவாள். இவ்வாறு தாமே தன் கணவனிடத்துள்ள பிரிக்கமுடியாத, மறக்கமுடியாத பிணிக்கப்பட்ட அன்பினாலும், நல்லொழுக்க முறையில் பயின்ற பெண்மையின் ஆற்றலாலும், தானே தானே தெரிந்து தெரிந்து தனது கணவன் பணிகளையும் அவன் எண்ணக் குறிப்புகளையும் சொற்களையும் பொன்னேபோற் போற்றுவாள். இவ்வாறன்றித் தலைவன் கட்டளை என நினைந்தோ, அவன் கட்டளைக்கமைதல் எனக்குக் கடமை ஆயிற்றே என எண்ணியோ உளப்பான்மையின்றிச் சொன்னதைச் சொல்லும் கிள்ளைபோன்று சொல்வதைச் செய்தல் கற்புடைப் பெண்டிர் இயல்பாகாது.

இனிக் கணவனிடத்து யாத்த அன்பின் முதிர்வு உடையாள் ஆதலின், அன்பீன் குழவி அருள் அவ்வழி அவளிடத்துண்டாம். அவ்வாறாகவே உலகத்து ஏனைய உயிர்களிடத்தும் அன்பு, அருள், இரக்கம் தோன்றுவனவாகும். அதனால் தன் இல்லம் தேடிவரும் ஏழைவிருந்தினரைக் காணுமிடத்து, இயல்பாகவே அகம் குழைந்து, அருள்காட்டி, இரங்கிநிற்பாள். எனவே, அவ்வியல்பு காரணமாக இன்முகம்காட்டி, கண்ணிற் கருணை பொழிந்து, தேனெனப்பாகென இன்மொழி சொரிந்து ஏற்ற ஏற்றவாறு உபசரித்து மனையறம்காத்துமகிழுவாள். அருள் அரும்பு முள்ளததாள், அறமே

(9-ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு சித்திரை மீ 28உ (10-5-64)

# விவாகப் பிரச்னை

ஒரு பக்கம் பெண்ணைப் பெற்றவர்கள் பெண்ணுக்கு விவாகமாகவில்லையே என்று தவிக்கையில், மறுபக்கம் அதைவிட அதிகமான ஆண்கள் தங்களுக்கு விவாகமாக முடியவில்லையே என்று சொல்ல முடியாது சங்கடப்படுவதைப் பார்க்கின்றோம்.

முன்காலத்திலிருந்ததைப் போல் பெண்ணுக்கு சுயம்வரம் வைத்து தனக்குப் பிடித்தமான வரனுக்கு மாலையிட்டு மணம் செய்து கொள்ளலாமென்று இருப்பின் இந்த விவாகப் பிரச்னையே வெகுவாகக் குறைந்துவிடக்கூடும்! ஆனால் இக்காலத்தில் அது சாத்தியமா?

படிப்பு, பணம், சாதி, மதம், குலம், ஜாதகம் முதலிய பல பல காரணங்கள் குறுக்கிட்டு பெண்களுக்கும் ஆண்களுக்கும் விவாகப் பிரச்னையை அதிக சிக்கலாக்கியுள்ளதைப் பார்க்கின்றோம்.

ஒரு பெண் மிக புத்திசாலி. படித்துப் பெரிய பட்டம் பெற்றவர். பணமும் அதிகமுண்டு. என்றாலும் விவாகமாவது பெரிதும் தடைபட்டுக்கொண்டு போகின்றது. ஆனால் ஓர் ஏழைப் பெண், படிப்பு அதிகமில்லை. விவாகம் அதிக சுலபமாக ஏற்பாடாகி நடக்கின்றது. ஏன்? படித்த பெண்ணுக்கு அவரைவிட அதிகம் படித்த வரனையே பார்க்க வேண்டியுள்ளது. குறைந்த படிப்புள்ள ஆண், அதிகம் படித்த பெண்ணை விவாகம் செய்யப் பெரிதும் தயங்குவது இயற்கை. அதிகம் படித்த ஆணுயின் சீதனமும் லட்சக்கணக்கில் ஓடுகிறது. உத்தியோகமும் இருந்துவிட்டால், விவாக மார்க்கெட்டில் அதிக போட்டா போட்டிகள்.

ஆகவே தங்கள் பெண் அதிக புத்தி கூர்மையாக இருப்பினும், சில பெற்றோர்கள் ஓரளவுடன் (ஜி. ஸி. ஈ. வரையில்) பெண்களின் படிப்பைநிறுத்திவிடுகிறார்கள். பெண்ணின் படிப்பு ஏற ஏற, சீதனமும் அதிகரித்து, விவாகப் பிரச்னையும் அதிக சிக்கலாவதாயும், அதனால் இந்தப் படிப்பை நிறுத்தி, குடும்பத்துக்கு வேண்டிய சமையல், தையல் முதலியவற்றைக் கற்பிப்பதாகவும் பெற்றோரொருவர் தெரிவிக்கின்றார்.

இதில் வயதும் ஒரு முக்கியமான விஷயம். பெண்களுக்கு 16 வயதுக்குக் குறைந்தும் ஆண்களுக்கு 19-க்குக் குறைந்தும் விவாகம் செய்யப்படாதென்பது சட்டம், எவ்வளவு வயதுக்கு மேல் விவாகம் செய்யப்படாதென்ற உச்சவரம்பு இல்லை. முன்காலத்தில் பாலிய வயதில் விவாகங்கள் நடைபெறுவது சகஜமாக இருந்தன. அதனால் சீதனம் முதலிய சிக்கல்கள் அதிகம் இல்லாமல் விவாகங்கள் சுலபமாக நடக்க முடிந்தது. ஆனால் இப்போது நாம் படித்து அதிக "நாகரிக" மாகிவிட்டோம். அதனால் பாலிய விவாக முறையை நாம் நினைக்கவும் கூடுமா?

இந்தியாவிலே பெண்களுக்கான விவாகவயதை 16 லிருந்து 19-க்கு உயர்த்தவேண்டுமென்றும், எந்தப் பெண்ணும் அதற்குமுன் குழந்தை பெறக்கூடாதென்று செய்துவிட்டால், அங்கு ஜனனவிகிதம் 20 வருஷ காலத்திலே,நாற்பதிலிருந்து 20க்குக்குறைந்துவிடலாமென்றும்கூறுகிறார் ஒரு நிபுணர்! விவாக வயதுக்கும் ஜனனவிகிதத்துக்கும் அதிக சம்பந்தமுள்ளதென்பதைக் கண்டுபிடித்திருக்கிறார் அவர்! பெண்கள் 60 வயதுக்கு மேல் தான் விவாகம் செய்யவேண்டுமென்று சட்டம் செய்துவிட்டால், ஜனப்பெருக்கம் முதலிய பிரச்னைகளை உலகத்தில் சுலபமாகத் தீர்த்துவிடலாம்! ஆனால் இது நடக்கக் கூடியதா?

விவாக விஷயமாக ஆண்களுக்கு மூன்று கட்டங்களுண்டென்பர். முதலாவது விவாகம் செய்வதா இல்லையா என்பது. இரண்டாவது கட்டம், யாரை விவாகம் செய்வதென்பது; கடைசியாக யாா நம்மை விவாகம் செய்வாரென்பதாகும். இக் கடைசிக் கட்டத்தில் இருப்பவர்கள் மனமுடையத் தேவையில்லை.

மகாத்மா காந்தி யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் பேசுகையில், பெண்கள் எல்லாரும் விவாகம் செய்யத்தான் பிறந்தவர்களல்லவென்றும், பொதுமக்களின் சேவைக்காகத் தங்கள் வாழ்வை அர்ப்பணிக்கப் படித்த பெண்கள் அதிகம் முன்வர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இது ஆண்களுக்கும் பொருந்தும். இந்த மேலான யோசனையை நிறைவேற்ற யாரால் முடிகிறதோ அவர்களுக்கு விவாகப்பிரச்னையும் உடன் தீருவதுடன் சமூகத்துக்கும் நாட்டுக்கும் நல்லதாகவும் கூடும்.

ஈழத் தமிழ் நாட்டில கண்ணகி கோவில்கள் — 4

# வட இலங்கையில் 'கண்ணகை'

— வை. முத்துக்குமாரசுவாமி பி. ஏ. —

ஒரு தமிழ்ப் பெண், ஒரு பத்தினியாக, ஒரு வீராங்கனையாக, ஒரு தெய்வீக சக்தியாக தமிழ் நாட்டிலே பிரகாசிக்கிறாள். இப் பெண் சோழ நாட்டின் சிறந்த துறைமுகமாகிய புகாரிலே பிறந்தாள்; பாண்டி நாட்டிலே புரட்சியொன்றை விளைவித்தாள்;சேர நாட்டிலே அவளுக்குக் கோட்டம் அமைத்தனன் சேரன் செங்குட்டுவன். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை அளித்தான், இளங்கோ – சேரமன்னனின் சமஸ்தான வித்வானும், அவன் அண்ணனும். சிலப்பதிகாரத்தில் உள்ள "கோவலன்—கண்ணகி" கதை சேர, சோழ, பாண்டிய நாடுகளை இணைக்கிறது.

ஆனால் 'கண்ணகி'கதை நம் ஈழநாட்டுடனும் இணைக்கப்பட்டிருக்கிறது. மாநாகன் மகள் கண்ணகி ஒற்றைப்பாதச் சிலம்புடன் அவதரித்துள்ளாள். அவளுக்கு இரண்டாவது சிலம்பு செய்யக்கூடிய தந்தை; நாகரத்தினம் வேண்டிச் சோழமன்னன் உதவியை நாடினன். சோழமன்னன் மீகாமன் என்னும் கடற்படைத் தலைவனை யாழ்ப்பாணமாகிய நாகதீபம் அல்லது மணிபல்லவத்துக்கு படைவீரருடன் மரக்கலத்தில் அனுப்பிவைத்தான். அவன் நெடுந்தீவுக்காவலனான வெடியரசனைச் சந்தித்தான். இருவருக்கும் போர் நிகழ்ந்தது. மீகாமன் தோல்வியுற்றான். பின்பு மீகாமன் மீண்டும் தேவியின் (நாகபூஷணி அம்மன்) அருளால், வெடியரசனுடைய தருக்கை அழித்து கண்ணகிக்கு நாகரத்தினம் கொண்டுசென்றான். கடலோட்டு காதை, வெடியரசன் நாடகம் என்னும் நூல்கள் இக் கதையைக் குறித்துள்ளன. இக் கதை யாழ்ப்பாணச் சரித்திர ஏடுகளில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

சேரன் செங்குட்டுவன் வீர பத்தினியாக விளங்கிய கண்ணகிக்குக் கோவில் தனது நாட்டில் அமைத்து விழாவும் எடுத்தான். அத்தருணத்தில்— (சிலப்பதிகாரம் வரந்தருகாதையை அவதானிக்கவும்.)

"அருஞ்சிறை நீங்கிய
ஆரியமன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம்
பிரிந்த மன்னரும்
குடகக்கொங்கரும் மாளுவ
வேந்தருங்
கடல்சூழ் இலங்கைக்
கயவாகு வேந்தனும்
எல்லாட்டாங்கண் இமைய
வரம்பனின்
நன்னாட் செய்த நாளணி
வேள்வியில்
வந்தீகென்றே வணங்கினர்
வேண்டத்
தந்தேன்வரமென்று எழுந்த
தொருகுரல்"

கண்ணகி பிரசன்னமாகி வேண்டிய வரங்கள் கொடுத்தனள். வந்தோர் பக்தி பரவசமாயினர்.

இலங்கை கயவாகு மன்னனைப்பற்றிச் சிலப்பதிகாரம் என்ன கூறுகின்றது என்பதைச் சற்றே ஆராய்வோம்.

"அது கேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு வென்பான், நங்கைக்கு நாட்பலி, பீடிகைக்கோட்ட முந்துறுத் தாங்கு அரந்தை கெடுத்து வரந்தருமிவளென, ஆடித் திங்களகவயின் ஆங்கோர் பாடிவிழாக்கோள், பன்முறையெடுப்ப மழை வீற்றிருந்து வளம்பல பெருகிப் பிழைவிளையுள் நாடாயிற்று".

கண்ணகி விழாவினால் நாடெங்கும்பருவமழைபெய்தது. பால்வளம், பயிர்வளம் பெற்றது. 'கண்டிப்பெரகரா' ஆதியில் கண்ணகிவிழாவாக இருந்தது என்பது அறிஞர் கருத்து.

தென் இந்தியாவில் இன்று கண்ணகிகோவில்கள்கிடையா. ஆனால் ஈழநாட்டிலே இன்றும் கண்ணகி கோட்டங்கள் பல உள்ளன. வட–கீழ் மாகாணங்களில் "கண்ணகி அம்மன்" என்றும் சிங்கள நாட்டில் "பத்தினி தெய்வம்" எனவும் வழிபாடு இத் தமிழ் வீராங்கனைக்கு இயற்றபபட்டு வருகிறது. கேரள, கன்னட இராச்சியங்களில், கண்ணகியம்மன் பகவதி, மங்கலாதேவி என்ற பெயர்களுடன் வழிபடப்பட்டு வருகின்றனள். சிங்கள மக்கள் இவளை "மணிமேகலாதெவியோ" என வழிபாடு இயற்றுகின்றனர்.

## வேலம்பராய்

ஈழநாட்டிலே கயவாகு பல பாகங்களில்கண்ணகிக்கு வழிபாடு இயற்றும்படி கட்டளையிட்டான். நாவற்குழி ஊருக்கு அணித்தே உள்ள "வேலம்பராய்" என்னும் இடத்தில் அமைக்கப்பட்ட கண்ணகி கோவில் வடஇலங்கையில் முதல் அமைக்கப்பட்டது என்று ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை அவர்கள் தமது யாழ்ப்பாணச் சரித்திரத்திலே கூறுகின்றனர். ஆண்டு தோறும் வைகாசிப் பௌர்ணிமை அன்று கிராமிய மக்கள் இங்கு "கண்ணகிவழக்கு" வாசிப்பதுண்டு. இவ்வாண்டும் 13-6-1964 அவ்வாறு வழிபாடு இயற்றுவர். இரவிரவாக ஆடவரும் பெண்டிரும் இளைஞரும்கூடி அயர்த்து வரும் கண்ணகி வழிபாட்டை சென்ற 1963—ல் நாம்பார்க்கக் கூடிய சந்தர்ப்பம்ஏற்பட்டது. கிராமத்திலே தாய்மார் காட்டும் பக்தி அளவிடத்தக்கதோ. இங்கு ஒரு கண்ணகையின் திருவுருவம் சிலம்புடன் காணப்படுகிறது.

## அங்கணு கடவு அல்லது அங்கணுவைக் கடவை

வேலம்பராய்க்குப்பின் கட்டப்பட்ட கண்ணகி கோவில்கள் நவாலியூரிலே உள்ள கலையோடையும் அங்கணுட் கடவுமாகும் என்பன என்று யாழ்ப்பாணச் சரித்திரம்—ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை (பக். 29) கூறுகிறது.

"உன்னை நெஞ்சாரவே
நினையாத வாறோ
ஓது மறையோ மனமுது
மொழி வினை தானோ
என்னை வினை யென்றறியே
னெனது சென்னிக்குள்
எய்திய பிணித்துயரை நீ
கீளைந் தருள்வாய்
தென்னவனை அன்று பழி
கொண்ட திருமாதே
தேசிகர் குலத்திலே வந்த
தெள்ளமுதே
அன்னநடை மாமயிலே தெய்வ
நாயகமே
அங்கணுஐமக் கடவை மருவு
கண்ணகையே

கண்ணகை அம்மன் உடுக்குச் சிந்து (25).

நவாலி கலையோடையில் கண்ணகை அம்மன் முதுப் பாட்டி வடிவம் தாங்கி, தனக்குப் பசி என்றும் பொங்கல் தரும்படி கேட்டதாகவும் அங்கு அவருக்குப் பொங்கல் கொடுத்ததாகவும் ஊரில் உள்ள சைவப் பெரியார் கூறுவர். அங்கண்ணன் (அழகிய கண்களையுடைய கண்ணகி அம்மை) கடவு என்பதே அங்கணுக் கடவை என்று திரிந்துள்ளது. இது யாழ்ப்பாணத்தில் இருந்து 6 மைலும் சுன்னாகத்திலிருந்து 3 மைல் தொலைவிலும் உள்ள மாசியப்பிட்டியில்இருக்கின்றது. இங்கு கரு அறையில் (மூலஸ்தானத்தில்) சிலம்பு இருந்தது. அதன் பின், அம்மனின் தலை மட்டும் வைக்கப்பட்டது. கண்கள் விசேடமாகக் காணப்படுகிறது. சிலம்பில் ஒரு பாம்பு சுற்றி இருப்பதாகக் காணப்படுகிறது. நாகவழிபாடு நாகர்களால் இயற்றப்பட்டு வந்தது. அதன் பின்னர் சிலம்பில் பாம்பு சுற்றப்பட்டுக் காணப்படுவது தேவி வணக்கத்துக்குச் சின்னமாக அமைந்திருக்கிறது. இக்கோவில் ஆதியில் சைவப் பூசகர்களால் பூசை செய்யப்பட்டு வந்தது. பிராமணர் பூசைசெய்ய ஏற்பாடுகள் வந்தபின், இங்கு 'மீனாட்சி', 'மாரி', 'நாகபூஷணி', 'கண்ணகி' என்னும் நான்கு சக்தி அம்சங்களின் வழிபாட்டைக் காணக்கூடியதாக இருக்கிறது. இக் கோவில் கந்தரோடைக்கு சமீபத்தில் இருக்கிறது. இக்கோவிலுக்கு முன் காணப்பட்ட தலையில்லாத ஓர் ஆளின் சிலை கயவாகு மன்னனுடையதாகலாம் என்று முதலியார் இராசநாயகம் அவர்கள் கருதினர். 'கயவாகுவின் திறை அரசனான வீரோதய சிங்கன் என்பவன், காலத்திலே இந்தக் கண்ணகிவேலம்பராய்கோயில், கலையோடையாதியன அமைக்கப்பட்டன என்று யாழ்ப்பாணச் சரித்திரம் (ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை பக்.28) கூறுகிறது. இக்கோவிலில் இன்று மீனாட்சி அம்மனுக்கு விழா நடைபெறுகிறது. கண்ணகிக்கு விழா நடைபெறுவதில்லை. ஆயினும் இங்கு கண்ணகியின் திருவுருவம் உண்டு. அதற்குப் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

## வற்றாப்பளை

வைகாசிமாதத்திலே வற்றாப் பளையில் கண்ணகிக்குப் பொங்கல் நடைபெறுகிறது. இது வன்னி நாட்டில், முல்லைத்தீவுப் பகுதியில் தணியூற்றில் இருந்து இரு மைல்தொலைவில் உள்ள நந்திகடலின் மேற்குக் கரையோரத்தில் உள்ள கிராமம். கடலில் உள்ள வெண்மணற் திடரில் கண்ணகி ஒரு பாட்டி போல் தோன்றினர். அங்கு மந்தைகள் மேய்த்து நின்ற சிறுவர்களை "மக்காள் வாருங்கள்" என்று அழைத்து "பேன் கடிக்கிறது பாருங்கள்" என்று கூறினர். அவர்கள், பாட்டி குனிந்து தலையைக்காட்டு என்று சொல்லி மயிரை விரித்துப் பார்க்கையில் தலைமுழுதும் கண்களிருக்கக்கண்டு அச்சமும் அதிசயமும் கொண்டனர். இன்ன இடத்தில் ஒருபாட்டி வந்திருக்கிறு, தலைமுழுதுங்கண்களிருக்கின்றன என்றார்கள். இதுகண்டு கிராமத்தில் உள்ளவர்கள் சடுதியாக வந்து பார்க்கையில் அங்கு ஒரு பாட்

(5-ம் பக்கம் பார்க்க)

## நமது நூல் நிலையம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏடு துளைத்தது போது
மினி நாட்டீர்
எழுந்து வாருந் தொழில்
புரிய.

சொற்செட்டும், பொருள் விளக்கத்துக்குரிய எடுத்துக் காட்டும் இப்பாடலின் அழகை மிகுதிப்படுத்துகின்றன.

'ஓட்டுப் போடுங்கள்' என்ற ஒரு பாடல்:

"கடைவிரித்து மதிமயக்கும்
காரியப் புலி நரிகளுக்கும்
தொடை நடுங்கி அலிகளுக்
கும்
தோல்வி காட்டி நீதி
நாட்டி" - (ஓட்டு)

ஜனநாயகத் தேர்தலுக்கு வாக்காளர் செய்ய வேண்டிய செயலை உறுத்திக்காட்டி உணரவைக்கிறது இப் பாடல்.

'அன்பறஞ்செய்' என்ற தலைப்பில் உள்ள ஒரு பாடல்:

அன்பறஞ்செய் என்ப
தெல்லாம்
அச்சு நூலிலே - பிறர்
துன்புறவே நடக்கின்றார்
தொல்லுலகிலே
பையினிலே பைபிளுண்டு
படுகொலை செய்யக்
கையினிலே ரைஃபிளுண்டு
கருணையில்லையே.

இக்காலக் கொள்கையை இடித்துரைக்கும் பாடல் இது.

—செ. கதிரேசபிள்ளை

# ஷேக்...ஷேக்...அப்துல்லா!

"ஷேக் அப்துல்லா டில்லி வந்திருக்கிறாரே?"

"ஆமாம். தெரிந்ததுதான்"

"யானைமீதா, குதிரைமீதா?"

"இரண்டிலுமில்லை விமானம் மீது."

'பால'த்தில்தானே இறங்கினர்?

"இல்லை, இல்லை. பாலம்விமான நிலையத்தில்."

"நான் கேட்டது புரியவில்லையாக்கும்"

"புரிகிறது. புரிகிறது. இதெல்லாம் ஒரு கேள்வியா?"

"கட்டாயம் கேட்கத்தான் வேண்டும். எங்கு பார்த்தாலும் 'ஷேக் ஷேக்' என்று சேகண்டி முழக்கம் கேட்கிறதே. 'இம்மாதப் பிரமுகராக' ஷேக் அப்துல்லா வளர்ந்துவருகிறரே; ஏன், இந்திய அரசியலில் 'இவ்வாண்டுப் பிரமுகராக'வும் அவர் வளரக் கூடும்போல் தெரிகிறது. ஆகவே இக் கேள்விகளும் அவசியம்தான்."

"சரிதான்"

"இந்தியாவில் அவர் யார் யாரைச் சந்தித்தார்?"

"ஏராளமானேரைச் சந்தித்தார்."

"ஏராளமானோர் என்றால் யார்யார் என்றுதான் சொல்லுமே".

"பிரதமர் நேரு, ஜனதிபதி ராதாகிருஷ்ணன், உப ஜனதிபதி டாக்டர் ஸ்கிர்ஹுசெய்ன், ஜயப்பிரகாஷ் நாராயண், ஆச்சார்யா விநோபாபாவே, ராஜாஜி, காமராஜ், பக்ஷி குலாம் முகம்மது, டாக்டர் கரன்சிங், ஸாதிக், சாஸ்திரி, சக்ஸா, டி. டி. கே, கபீர், மொரார்ஜி, சுவர்ண்சிங், எம். பி.க்கள், முஸ்லிம் ஸ்தாபனப் பிரதிநிதிகள், முஸ்லிம் மக்கள், பத்திரிகை நிருபர்கள், இன்னும்...... இன்னும்........"

"போதும் போதும். இவ்வளவுபேரையும் சந்தித்து சூறாவளிப் பேச்சு நடத்துவதிலிருந்தே ஷேக்கின் சுறுசுறுப்பு எப்பேர்ப்பட்டது என்று தெரிகிறது. இதிலிருந்தே காஷ்மீரைப் பொறுத்தவரை, ஷேக் அப்துல்லாவின் முக்கியத்துவம் எவ்வளவு என்றும் தெரிகிறது அல்லவா? இத்தனைபேர்களையும் சந்தித்து அவர் என்னதான் பேசினர்?"

"காஷ்மீரைப் பற்றியும், இந்தியா—பாகிஸ்தானைப்பற்றியும் தான்."

"அது தெரியும். காஷ்மீர் நிலைபற்றி அவரது இறுதியான கருத்தை உருவாக்கியிருக்கிறாரா? சுயநிர்ணய உரிமையை இன்னும் வற்புறுத்தி வருகிறாரா?"

"அப்படித்தான் தோன்றுகிறது. ஆனாலும் நிச்சயமாகத் தெரியவில்லை. ஆள் பிடிகொடுக்காத ஆசாமி. விடுதலைக்குப்பின் காஷ்மீரில் அவர் பேசியதற்கும், இந்தியாவில் பேசிவருவதற்கும் தொனியில் சிறிது வித்தியாசம் தென்பட்டாலும் கூட, தனது இறுதி முடிவு என்ன என்பதை அவர் இன்னும் உறுதியாக வெளியிடவில்லை.

காஷ்மீரில் அவர் பல்வேறு அர்த்தம் தொனிக்கும் கருத்துக்களை வெளியிட்டு குப்பையைக் கிளறிவிட்டார். ஒருவேளை இது, அந்த ராஜ்ய மக்களையும், ராஜ்ய அரசாங்கத்தையும், இந்தியாவையும் ஆழம் பார்க்கும் நோக்கம் கொண்டதாய் இருக்கலாம்.

## உலக மேடை

எந்தக் கருத்துக்கு அதிக ஆதரவு இருக்கிறது என்பதையும், அதன் எதிர் விளைவுகளையும் அறிய அவர் எண்ணியிருக்கலாம். எதுவாயினும் ஷேக் டில்லிவருமுன்பே, தாம் சக்தியுள்ள ஒரு காஷ்மீரி என்பதை நிரூபித்துவிட்டார். அதை அங்கீகரிக்குமுகமாகவோ என்னவோ புதுடில்லி விமானநிலையத்தில் அவரை வரவேற்க இரு துணை மந்திரிகளையும் கூட நேரு அனுப்பினர். இதனால் லோகசபையில் பிரதமர்மீது கண்டனமும் தெரிவிக்கப்பட்டது."

"ஓகோ அப்படியா?"

"பிரதம மந்திரியின் விருந்தினராக ஷேக் வருகிறார். எனவே தனது நண்பரின் விஜயத்துக்கு ஓரளவு அரசாங்க முக்கியத்துவம் கொடுக்க அவர் விரும்பியிருக்கலாம். மனோதத்துவரீதியில் செயலாற்ற டினைவதில் நேரு கெட்டிக்காரர் அல்லவா? எனவேதான் ஷேக் 26-ம் திகதி டில்லி வருவதை 29-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். காரணம் என்ன தெரியுமா?"

"என்னவாம்?"

"தமது வீட்டுக்கு வரும் ஷேக் அப்துல்லாவை வரவேற்று உபசரிக்கும் பொறுப்பை தமது புதல்வியிடம் விட நேரு விரும்பினர். இதனால் ஸ்ரீமதி இந்திராகாந்தி நியூயோர்க்கிலிருந்து டில்லி வரும்வரை, ஷேக்கின் விஜயம் ஒத்திப்போடப்பட்டது அப்துல்லாவை 'மாமா' என்றும் 'அண்ணு' என்றும் அழைப்பவர்கள் நேரு வீட்டில் இருக்கிறார்கள். எனவே பூரண குடும்ப சூழ்நிலையில் ஷேக்கை உபசரித்து, அவரை மனமாற்றம் செய்ய நேரு எண்ணியிருக்கலாம். துணை மந்திரிகளை அனுப்பி வரவேற்றதின்மூலமும், ஷேக்கின் மனதில் மாற்றத்தை உண்டாக்க நேரு முயற்சித்திருக்கிறார். பெரிய ராஜதந்திரிகள் என்றால் இம்மாதிரிக் கலைகளில் தேர்ந்தவர்களாய் இருப்பார்கள். சிறிய ஆட்களுக்கு அது அவ்வளவாய் விளங்காது."

"நீர் சொல்வதும் உண்மையாய் இருக்கலாம் ஐயா. இதனால்தான் இந்தியாவில் ஷேக்கின் தொனி மாறியிருக்கிறதா என்ன?"

"இருக்கலாம். அல்லதுவேறு காரணங்களும் இருக்கலாம். குறிப்பாக காஷ்மீர் சுயநிர்ணய உரிமையை இமயம் முதல் குமரிவரையுள்ள இந்தியர்கள் வன்மையாக எதிர்ப்பதை நேரில் தெரிந்துகொண்ட காரணமாகவும் இருக்கலாம். அதேசமயம் ஷேக்கின் தொனி மாறியிருந்தாலும் இதயம் மாறியிருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்கமுடியவில்லை.

ஷேக்கும் ஒரு நல்ல ராஜதந்திரியாய் விளங்கக்கூடியவர் எனபதை கீழ்க்கண்ட அவரது வார்த்தைகள் குறிக்கின்றன.

"பிரதமர் வீட்டில் எனக்கு அருமையான சாப்பாடு கிடைக்கிறது. விநோபாவுடன் ஆன்மீகம்பற்றிப் பேசினேன். ராஜாஜியுடன் பிரத்யட்ச அரசியலைப் பேசினேன். ராதாகிருஷ்ணன் பிதா போன்றவர். நேருவிடம் முன்பு நான் கண்ட அதே சுறுசுறுப்பு இன்னும் இருக்கிறது. பிரச்னைக்குப் பொறுமைதேவை. தேசம் முழுதும் சமாதான சூழ்நிலையை உண்டாக்குவதில் அனைவரும் அக்கறை கொண்டிருக்கிறோம்" என்றெல்லாம் பற்பல சந்தர்ப்பங்களில் அவர் நிருபர்களிடம் குறிப்பிட்டிருக்கிறார். நிற்க:

அப்துல்லா எப்படிக் குட்டையைக் குழப்பியிருக்கிறாரோ, அதேபோல் அப்துல்லாவைப்பற்றிய இந்த விஷயமும் குட்டை குழம்பிப்போய்விட்டது. அவரது பெயரை இழுத்தவுடன், நமக்கும் குழப்பம் ஏற்பட்டுவிட்டதால் ஆரம்பத்தில் சம்பாஷணையாக உருவெடுத்த காஷ்மீர் பிரச்னை, தன்னையறியாமலே வழக்கமான பாணியில் திரும்பிக் கொண்டுவிட்டது. நேயர்கள் மன்னிப்பார்களாக.

அப்துல்லா முன்பு சிறிய மீசை வைத்திருந்தார். இப்போது முகத்தில் மீசையைக் காணோம். மொழு மொழுவென்று முகம் முழுவதும்க்ஷவரம் செய்திருக்கிறார். மிகவும் மகிழ்ச்சியுடனும் காணப்படுகிறார். இந்த மகிழ்ச்சி, சம்பந்தப்பட்ட சகலருக்கும் மகிழ்ச்சியளிக்கக் கூடியவகையில் காஷ்மீரப் பிரச்னை தீர உதவியாய் இருக்க வேண்டும்.

இதை நீங்கள் வாசிக்கும்போது ஷேக் அப்துல்லா டில்லியைவிட்டு ஸ்ரீநகருக்குப் புறப்பட்டிருப்பார். அல்லது புறப்படும் இறுதிக்கட்டத்திலிருப்பார்.

தற்போது ஷேக் அப்துல்லாவின் நாடகத்தை நான்கு கட்டங்களாகப் பிரிக்கலாம். சிறைமீண்டபின் ஜம்மு காஷ்மீரில் அவர் நடத்திய சூறாவளிச் சொற்பொழிவுகள் முதல் கட்டம். இந்தியாவில் தலைவர்களுடன் அவர் நடத்திய சம்பாஷணை இரண்டாவது கட்டம். காஷ்மீர் திரும்பிய பின் அவர் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கை மூன்றாவது கட்டம். பாகிஸ்தானுடன் அவர்கொள்ளவிருக்கும் தொடர்பு நான்காவது கட்டம்.

இதற்கிடையில் பாதுகாப்பு சபை காஷ்மீர் சம்பந்தமாக என்ன செய்திருக்கிறது என்பதையும் காணக்கூடியதாயிருக்கும்.

# சைப்பிரஸ்

மத்தியதரைக் கடலிலுள்ள முப்பெருந் தீவுகள் சிசிலி, சாடினிய, சைப்பிரஸ் என்பனவாகும் இவற்றில் சைப்பிரஸ் மூன்றாவது பெரிய நாடாகத்திகழ்கின்றது. சைப்பிரஸின் ஜனத்தொகை சுமார் 560,000 ஆகும். 80 சதவிகிதம் கிரேக்கர்களையும், 16 சதவிகிதம் துருக்கியர்களையும் கொண்ட இத்தீவு உரோம சாம்ராச்சியத்தின் கீழும் கிரேக்க அரசின் கீழும் மாறி மாறி ஆளப்பட்டு வந்தது. 1571-ல் மாபெரும் துருக்கி சாம்ராச்சியமான ஒட்டமான் அரசின் கீழ் வந்தது. 1875-ல் சுயஸ் கால்வாயைத் தமதாட்சிக்குட்படுத்திய பிரித்தானிய ஏகாதிபத்தியம் இக் கால்வாயின் பாதுகாப்புக்காக சைப்பிரசையும் தனது ஆதிக்கத்தில் சிக்க வைத்தது. இதற்கு முக்கிய காரணமாயிருந்தவர் அப்போதைய கொன்ஸர்வேட்டிவ் கட்சிப் பிரதமர் டிஸ்றெயிலி ஆவர். முதலாவது உலகப்போர் முடிவுற்றபோது சைப்பிரசைத் தனது முடிக்குரிய கொலனி நாடாகப் பிரகடனப்படுத்தியது ஆங்கில ஏகாதிபத்தியம்.

இரண்டாவது உலகப்போர் முடிவுற்றதும் ஒடுக்கப்பட்ட கொலனி நாடுகள் பலவற்றில் சுதந்திரப் போராட்டங்கள் வலுப்பெற்றன. சைப்பிரஸிலும் சுதந்திரப் போராட்டப் புயல் வீசத்தொடங்கியது. இத்தகைய கிளர்ச்சிகளை நசுக்குவதற்கு பிரித்தானிய ஏகாதிபத்தியத்தால் கையாளப்படும் மிகப்பிரபலமான பிரித்தாளுங் கொள்கையை சைப்பிரசிலும் வெற்றியுடன் பிரயோகித்தனர் ஆங்கிலேய அரசினர். இங்குள்ள இருபெரும் தேசிய இனங்களாகிய கிரேக்கர்களுக்கும், துருக்கியர்களுக்குமிடையே அடிக்கடி இனக்கலவரங்கள் மூண்டு 1958-ம் ஆண்டு ஜூன் மாதம் உச்சநிலையை அடைந்தது. இதனால் சைப்பிரசில் "சட்டத்தையும், ஒழுங்கையும்" நிலை நாட்டுவதற்காக ஆங்கில அரசு தனது படைகளை அனுப்பச் சந்தர்ப்பங்கிட்டியது. அத்துடன் கிரேக்க சைப்பிரியர்கட்கும், துருக்கிய சைப்பிரியர்கட்கும் ஒற்றுமை ஏற்படாததால் அடுத்த ஒரு வருடங்களுக்குள் நாட்டைக் கூறுக்கி இரு இனங்களுக்கும் தனித்தனியே பிரித்துக்கொடுக்கப்போவதாக ஆங்கில அரசு கூறியது.

இத்தகைய சூழ்ச்சிகளை நன்கறிந்த சைப்பிரிய மக்கள் வெகுண்டெழுந்து தமது சுதந்திரத்துக்காக அணி திரட்டிப் போர் தொடுத்ததன் விளைவாக, சைப்பிரஸ் மக்களின் சுதந்திர வேட்கையை ஆங்கில அரசினல் முறியடிக்க இயலவில்லை. ஆகவே சைப்பிரசுக்கு சுதந்திரம் வழங்கி விட்டு அதே வேளையில் சைப்பிரஸ் மண்ணில் தமது படைத்தளங்களை லாவகமாக ஸ்திரப்படுத்திக் கொண்டது ஆங்கில அரசு. இத்தருணத்தில் சைப்பிரசில் புதிய வோர் சூழ்நிலை உருவாகியது.

சைப்ரஸ் சம்பந்தமாக ஏற்பட்ட இலண்டன் உடன்பாட்டின் 3-வது ஷரத்தின்படி பிரித்தானியா தனது படைத்தளங்களை சைப்பிரஸ் மண்ணில் என்றும்போல் தொடர்ந்து அமைக்கவும், பாதுகாக்கவும் சலுகை அளிக்கப்பட்டது. இதன்படி, அங்கு இரண்டு படைத்தளங்களையும், மற்றும் 10 படைப்பயிற்சி நிலையங்களையும் ஆங்கில அரசு இன்றும் கொண்டுள்ளது. மேலும், கிரீஸ் துருக்கி உடன்படிக்கையின்படி இவ்விரு நாடுகளும் சைப்பிரசில் படைத்தளங்களை அமைத்துள்ளன.

உள்நாட்டு அலுவல்கள்பற்றி இலண்டன் உடன்பாடு குறிப்பிடுகையில், சைப்பிரஸ் ஜனதிபதி ஒரு கிரேக்க சைப்பிரியராகவும், உபஜனதிபதி தடையுரிமையைக் கொண்டவரான ஒரு துருக்கிய சைப்பிரியராகவும் இருத்தல் வேண்டும் எனவும் பாராளுமன்றத்தில் 70 சதவிகிதம் கிரேக்கர்களும் 30 சதவிகிதம் துருக்கியர்களும் அங்கம் வகிக்கவேண்டுமெனவும் கூறப்பட்டது. இவையும் இவைபோன்ற வேறுசில அம்சங்களும் அரசியற் சட்டத்தில் இடம் பெறுவதால், சைப்பிரசிலுள்ள தேசிய சிறுபான்மையினரான துருக்கியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதென மேலெழுந்தவாரியாக நாம் எண்ணக்கூடும். ஆனல் உண்மையில்சைப்பிரசில் இனத்துவேஷமும் அவநம்பிக்கையும் வளரத்தான் செய்தது.

இலண்டன் உடன்படிக்கையில் அடிப்படையிலே பிறந்த அரசியற் கூட்டத்தைக் கொண்ட சைப்பிரசுக் குடியரசு 1960-ஆம் ஆண்டு ஒகஸ்டு மாதம் 16-ம் திகதி பிறந்தது. அதிமேற்றிராணியர் மக்காரியோஸ் இதன் முதல் ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சைப்பிரஸில்ஏற்பட்ட இனக்கலவரத்தை தொடர்ந்து இலண்டனில் ஒரு மகாநாட்டைக் கூட்ட பிரிட்டன் முடிவு செய்தது. பிரிட்டன், கிரீஸ், துருக்கி, கிரேக்க சைப்பிரியர்கள், துருக்கிய சைப்பிரியர்கள் பிரிட்டன் முதவியோரைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஒரு மகாநாடு இவ்வாண்டுஜனவரி 15-ல் நடைபெற்ற . அதிமேற்றிராணியார்மக்காரியோஸ் சைப்பிரசின் அரசியற் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்ய வேண்டும் என்றும், வல்லரசுகளுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகளை அறவே ஒழிக்கவேண்டும் எனவும் வாதிட்டார். துருக்கியும் துருக்கிய சைப்பிரியர்களும் இதை வன்மையாக எதிர்த்தார்கள். நாடு துண்டாக்கப்பட வேண்டும் என்று வெளி வெளியாகவே வாதாடினர்கள். இதன் பேறு ஒரு பெரும் முட்டுக்கட்டை!

இந்த யோசனையைத் தீவிரமாக எதிர்த்தார் ஜனதிபதி மக்காரியோஸ். சைப்பிரஸ் அரசின் கடமைகளை அன்னியரின் கையில் ஒப்படைப்பதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன் என முழங்கினர் மக்காரியோஸ், ஜனதிபதியின் யோசனைக்கேற்ப அரசியற்சட்டத்தில் வேண்டிய திருத்தங்களைச் செய்து, அத்துடன் அன்னிய வல்லரசுகளின் படைத்தளங்களையும் அகற்றினல் சைப்பிரிய மக்கள் தமது இனப்பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கேற்ற சூழ்நிலை உருவாகும் என்பதே சைப்பிரசில் உண்மையான நல்லெண்ணங் கொண்ட பலநாடுகளின் விருப்பமாகும்.

# வட இலங்கையில் 'கண்ணகை'

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டியும் காணப்படவில்லை. "நான் கண்ணகி; நீங்கள் எனக்கு இந்தச் சமுத்திர நீரைத்தானே எண்ணெயாக விளக்கேற்றிப் பொங்கல் பூசை செய்யுங்கள்" என்று ஓர் அசரீரி பிறந்தது. சொப்பனங்களிலும் காணப்பட்டார். அன்று தொடக்கம் இன்று வரையும் பொங்கல் விழாக்கள் வற்றாப்பளையில் நடந்துவருகின்றன. வைகாசி மாதம் 25-ம் திகதி இங்கு பொங்கல் விழா நடைபெறுகிறது.

ஒரு "வன்னிப்பாட்டில்" இத்தலத்தின் பெருமை தரப்படுகிறது;-

"கோலமா மதக்
கும்பா பொற்பானே
குலவணிகர் தங்குடிக்
குகந்த கற்பானே
ஞாலமாகப் புகழ்படைத்த
பத்தினியே
நாகமணி நூபுரக்
[illegible] தரசு பெற்றவளே
சாலி வயல் சூழவரு
வற்றுப் பளைதனில்
சவள மொடு பவள நிறை
தண்டிகை பரப்பி
காலமழை பொய்க்கினும்
உன் கருணை பொய்யா
கண்ணகையே ஒருபொழுதும்
நாவில் அயரோமே"

இங்கு கிராம வழிபாடு இயற்றப்பட்டுவருகிறது.

## கணவனுக்குத் தெரியாமல் கதை எழுதினர்

மேற்கு ஜெர்மனியில் ஒரு குடும்பத்தை நடத்தும் பெண்மணி ஒரு நாவல் எழுதியிருக்கிறாள். அவள் பெயர் மில்டி கார்ட். மேரியா பெங்டா பிஸ்சாப், புத்தக விமர்சகர்கள் எல்லோருமே ஒருமுகமாக இப்புத்தகத்தைப் பாராட்டியிருக்கிறார்கள். "6 கரெக்ட்" என்பது இந்த நாவலின் பெயர். பள்ளிக்கூட நோட் புத்தகம் ஒன்றில் மணியான கையெழுத்தில் இவர் இதைஎழுதினர். ஆனல் தன் கணவருக்கும்நண்பர்களுக்கும் தெரியாமல் அதை ஒளித்து வைத்திருந்தார். இந்தக் கையெழுத்துப் பிரதியை மேற்கு ஜெர்மன் பத்திராதிபர் ரோவோல்டுக்கு அனுப்பினர். தன்மதிப்பு தனக்கே தெரியாத காரணத்தால் இப்பிரதியை திருப்பிப் பெறவும் போதிய தபால் தலைகள் வைத்து அனுப்பினர்.

தொடர் கதை

# யாத்திரிகள்

"நீலாம்பரி"

வழியிலே—அது எந்த இடமென்பது மறந்துபோய் விட்டது. இரண்டு கைக்கும் விலங்கிட்டபடி ஒருவனை பொலிஸ் காவலாளிகளும் சிறைக் காவலாளிகளும் கூட்டி வந்து ரயிலேற்றினார்கள். அவன் மரணதண்டனை விதிக்கப்பெற்றவனும் மனைவி பிள்ளைகளாக அவனது குடும்பத்தினர் ரயிலடியில்கூடி செத்தவீடு கொண்டாடினார்கள். ரயில் நகர்ந்தபோது அதனோடுகூட ஓடிய அவன் மனைவி ரயிலுக்குள்ளே வீழ்ந்து சாகாமல் மயிரிழையில் காப்பாற்றப்பட்டான். ரயில் நிலையத்திலிருந்து ஒரு கால்மைல் தூரத்தில் இருந்த திருப்பத்தில் ரயில் சென்று பார்வைக்கு மறையுமட்டில் ரயில்மீது — அவன் மீது, வைத்த கண் எடுக்காமல் பார்த்துக்கொண்டு நின்றவர்கள் ரயில் திரும்பி மறைந்த மாத்திரத்தே நிலத்தில் வீழ்ந்து புரண்டு கதறினார்கள். ஆம், அந்த திருப்பத்தில் அவன் அவர்களுக்கு இல்லாதவனாகிவிட்டான்.

ரயில் நிலையத்துக்கு வழி அனுப்ப வருவோரின் கூட்டத்தை எங்கேயும் தவறாமல் பார்க்கலாம். ரயில் பெட்டியின் யன்னல் சட்டத்தில் கையை வைத்து கையில் தலையைச் சாய்த்து பயணம்போகும் பிரயாணியின் முகத்தைப் பார்த்தபடியே ரயில் நழுவும்வரை காத்துநிற்பார்கள். அப்ப பின்னே, போய் விட்டுவா. போனவுடனே காகிதம் எழுத மறந்துபோகாதே. சாமான்கள் பத்திரம் நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும். வேறேன்ன, சுகமாய் போய்ச்சேர்ந்து புத்தியாக நடந்துகொள். இவ்வளவு நாளும் விளையாட்டுப் பிள்ளையாக இருந்துவிட்டாய் இனிமேலாவது ஓர் ஆளாகப் பார்—பிரயாணிகள் பெட்டி ஒவ்வொன்றின் முன்னிலையிலும் இக்காட்சியை எல்லா ஸ்டேஷன்களிலும் இன்றைக்கும் நாளைக்கும் காணலாம். ரயில் நகரும்வரை இப்படியே திரும்பத்திரும்ப சொல்லிக்கொண்டிருப்பார்கள். ரயில் நகரத் தொடங்கிய மாத்திரத்தேசிலர் கண்களைத் துடைத்துக்கொண்டு திரும்புவார்கள். சிலர் மரம்போல் அசையாமல் நின்று ரயில் பார்வைக்கு மறைந்த பின்னரே திரும்புவார்கள்.

இங்கே எனது பெட்டியில் நான் உட்கார்ந்திருந்த ஆசனத்துக்கு இடதுபக்கமாக இரு யன்னலோர மூலையிலும் ஓர் ஆணும் பெண்ணும். ஆண் வயதானவர். பெண் இளம் பெண். தந்தையும் மகளுமோ? பட்டணவாசிகள் போலத் தோன்றுகிறது. இருபேரும் அங்குமிங்கும் பார்வையைச் சும்மா ஓடவிட்டு ஒன்றும் பேசாமலே மௌனமாக உட்கார்ந்திருக்கிறார்கள். அவள், தன் கையில் வைத்திருக்கும் புத்தகத்தின் மீது அடிக்கடி பார்வையைச் செலுத்தியபோது மனம் நிம்மதியற்றிருக்கிறது என்பது முகத்தில் தெரிகிறது. அந்தப் பளிங்கு முகத்தில் அற்பமான உணர்ச்சிரேகையும் ஸ்பஷ்டமாகப் புலப்பட்டு விடுகிறது.

ரயில் அங்கங்கு நின்றபோது அவர்கள் பேசிக்கொள்வது என் காதில் விழுகிறது. இன்றைக்கு கூட்டம் வெகு குறைவு. துணியை ஆசனத்தின் மீது விரித்து அதன்மீது சாய்ந்து கண்களை மூடிக்கொண்டேன்.

"ரயிலடியில் ஏகப்பட்ட கூட்டமாயிருந்ததே. ஆனால் இங்கே எங்கள் பெட்டி காலியாகக் கிடக்கிறதே அப்பா" என்று கேட்கிறாள் அவள். குரல், வீணையின் நாதம்போல கணீரென்றிருக்கிறது. வீணையில் காந்தாரமும் மத்திமமும் இழைந்து கொஞ்சுவதுபோல அழகாகப் பேசுகிறாள். அவர்கள் தகப்பனும் மகளும் தான். "ரயிலடிக் கூட்டம் முழுதும் பயணமானால் இந்த ரயிலில் எங்களுக்கு இடம் கிடைத்திருக்காதே. பயணகாரரை சந்திக்கவென்றும் வழி அனுப்பவென்றும் பல காரியமாக ஆட்கள் வந்துகூடுவார்கள். இதற்குப் பெயரே யாழ்ப்பாணம் கோச்சு,பிள்ளை. பிரயாணிகள் முழுப்பேரும் யாழ்ப்பாணம் போகிற ஆட்களாகத் தானிருப்பார்கள். அவர்களைக் கவனித்துப் பார்த்தாயானால் தெரியும். அவர்களுக்கென்று ஒரு பேச்சும் குணமும் பண்பும் பார்வையும்கூட இருக்கிறது" என்று அவளுக்குப் பதிலளிக்கிறார் அவள்முன் உட்கார்ந்திருந்த பெரிய மனுசர்.

அவள் மார்பில் புரண்ட பவுண் சங்கிலியில் ஒரு பெரிய பதக்கம் பொருத்தப்பட்டிருக்கிறது. அதை ஒருகையில் எடுத்து வாயில் வைத்து சுவைத்துக்கொண்டே மற்றக் கையிலிருந்த புத்தகத்தின் மீதும் நடுநடுவே பார்வையைச் செலுத்தி இரண்டிலும் நகைச்சுவை காணாமல்முகத்தில் இன்னமும் வாட்டமும், எதிலும் ஈடுபாடற்ற மனச்சோர்வுமே நிழலிட, முன்னாலிருந்தவரிடம் பேச்சுக்கொடுத்து அவர் கூறுவதை உற்றுக் கேட்டுக்கொண்டு இருந்தாள். அவள் அவரது குமாரிதான் என்பதை இப்பொழுது நிச்சயமாகத் தெரிந்து கொண்டேன்.

"நல்லாய்ச் சொன்னீர்கள் அப்பா. மேடையிலே சற்று வேளை என்னைத் தனியேவிட்டு நீங்கள் டிக்கட்எடுக்க போயிருந்தபோது ஒருவனைச் சிறிதே கவனித்தேன். எங்கள் வீட்டுப் பக்கமாக எங்கேயோ பார்த்த முகமாயிருக்கிறதே என்று ஆளை ஒருக்கால் அவதானித்தேன். அவனே டிக்கெட் வாங்கிக்கொண்டு நீங்கள் திரும்புவதற்குள்ளாக நூறுதடவை என்னைத் தாண்டி மேலும் கீழுமாக நடந்துவிட்டான்" என்று அந்தப்பெண் கூறியபோது தகப்பனார் மௌனமானார். இன்னமும் உலகம் தெரியாத குழந்தையாயிருக்கிறாளே இவள் என்று எண்ணிப் பெருமூச்சு விடுவதைத் தவிர ஒரு தகப்பனார் அப்பொழுது வேறு என்னத்தைச் சொல்வார்?

ரயில் அங்கங்கு தங்கி ஓய்வெடுத்துக்கொண்டே காடும் மலையும் குடைந்து இருளைக் கிழித்து தூரத்தை துவம்சம் செய்து ஓடிக்கொண்டேயிருக்கிறது. அவர்கள் பேச்சு வளர்கிறது. அவளுடைய பெயர் திலகவதியாயிருக்க வேண்டும். ஏனெனில் தகப்பனார் அவளிடம் பேசியபோது திலகம், திலகம், என அழைத்தார்.

(தொடரும்)

---

# சிறுவர் பூங்கா

## பாலவீரன்

— 'வாகீஸ்' —

சைக்கிளில் சென்று கொண்டிருந்தவன் ... பாயில் படுத்திருக்கின்றான். கனவோ? இல்லை இல்லை. கண்களை நன்கு கசக்கிக்கொண்டான். கண்கள் எரிந்தன. நனவுதான்! பாயை விட்டு எழுந்தான், பாலன். குகைக்குள்ளே எப்படி வந்தேன் ... அண்ணாந்து பார்த்தான். குகைதான், சந்தேகமில்லை! குகையிலிருந்த ஒரு வெடிப்பினூடாக சூரிய ஒளி உள்ளே வந்து கொண்டிருந்தது ... அப்போ ... விடிந்துவிட்டதா? அப்பா அம்மா எங்கு தேடுகிறார்களோ ... எங்கே இருக்கின்றேன் ... எப்படி இங்கு வந்தேன் ...

எதையெல்லாமோ சிந்தித்தான், பாலன். நாடகம் பார்த்தது ... அதுவும் பெற்றோருக்குத் தெரியாமல்! யாரோ இருவர் வழிமறித்தது ...முகத்தில் கைலேஞ்சி விழுந்தது... பின்... பின்... நடந்தது?

அவனது சிந்தனையைத் தடைசெய்தது, அப்போதெழுந்த ஓர் ஒலி. குகையின் ஒருபுறச் சுவரிலிருந்துதான் அவ்வொலி எழுந்தது...

ஆடாமலசையாமல் அடித்து வைத்த சிலைபோல் அமர்ந்திருந்தான், பாலன். சத்தம் வர வரப் பெரிதாகிக் கொண்டுவந்தது. மறுகணம் —

சுவரில் ஒரு வாசல்!

பாலனின் திகைப்பு நீங்கு முன், அந்த வாசலுக் கூடாக உள்ளே நுழைந்தது, ஒரு உருவம்.

பெரிய, கறுப்பான உருவம்! நீண்டதாடி. தலையிலே உச்சிக் குடுமி. அதிலே சொருகப்பட்ட பறவைகளின் இறக்கைகள். கொவ்வைக் கனியோ என ஐயுறவைக்கும் சிவந்த, பெரிய விழிகள். கையிலே ஒரு கோல்! பார்ப்பதற்கு மகா பயங்கரமான தோற்றம். ஒருவேளை மந்திரவாதியோ?

மந்திரவாதி! இதை நினைத்தவுடன் பாலனுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. காரணம், மந்திரவாதிகள், பிள்ளைகளைப் பிடித்துப்போய் காளிதேவிக்குப் பலிகொடுத்து தமது இச்சையைப் பூர்த்தி செய்யும் வழக்கமுடையவர்கள் என்பதை தாய் கூறக்கேட்டிருக்கின்றான்; பத்திரிகைகளில் படித்திருக்கின்றான். ஒருவேளை ...என்னையும் ... இதை நினைக்கவே பாலனின் சப்தநாடியும் ஒடுங்கிவிட்டது.

"தம்பி, பாலா! நீ நினைப்பது போல் நான் மந்திரவாதிதான். ஆனால் உன்னைப் பலிகொடுப்பதற்காக அழைத்து வரவில்லை. நான்கூறுவதுபோல் நீ நடந்தாயென்றால் ... பின் எமக்கு நிகர் நாமேதான்! எம்மைப்போல செல்வமிக்கவர்கள் இந்த மண்ணுலகிலே, ஏன் விண்ணுலகிலே-கூட இருக்கமுடியாது. அதன்பின் உன்னை நானே கொண்டுபோய் உன் பெற்றோரிடம் ஒப்படைத்து விடுவேன். நீயும் சுகமாக வாழலாம் ... என்ன! சரிதானே?"

மறுகணம், அந்த உருவம் மறைந்துவிட்டது! ஆனால் அந்த வாசல் ... அது அப்படியே தான் இருந்தது!!

சந்தர்ப்பத்தை - கிடைத்தற்கரிய அந்த வாய்ப்பை வீணாக்க பாலன்விரும்பவில்லை. செய்யப்போவதை நினைக்க நினைக்க உள்ளம்பூரித்தது. திறந்திருந்த அந்த வாசலை நோக்கி ஓடினான் பாலன், தன் முழு வேகத்தையும் பயன்படுத்திக்கொண்டு!

"படீர்!"

எவ்வளவு வேகத்துடன் முன்னேடினானே அவ்வளவு வேகத்துடன் பின்புறமாக விழுந்தான பாலன். நெற்றியிலே நல்ல அடி! நல்லவேளை காயமொன்றுமில்லை. எதிரே நிமிர்ந்து பார்த்தான், பாலன். வாசல் ...திறந்துதானிருந்தது! அப்ப ...

பாலன் மெதுவாக எழுந்தான். உடலிலே நல்ல அடி. ஊமைக்காயம்! உடலெங்கும் வலித்தது!! மெதுவாக நொண்டி நொண்டி வாசலை நோக்கி நடந்தான். இதோ! வாசலை நெருங்கியும் விட்டான். வாசலை நோக்கி இரு கைகளையும் நீட்டினான் பாலன்.

"ஐயோ! என்ன கொடுமை!!......" கதறி அழவேண்டும் போலிருந்தது, பாலனுக்கு! ஏன்?

காரணம், அந்த வாசல் அடைத்துக் கிடந்ததுதான். ஆமாம், கண்ணாடிச் சுவரால் அல்லவோ அவ் வாசல் அடைபட்டிருந்தது! அதையறியாத பாலன் செய்தவேலை...!

கண்ணிமைக்கும் நேரம்! பாலன் இருந்த குகை 'கிடுகிடு' வென்று ஆடியது. எங்கிருந்தோ ஒரு கர்ணகடூரமான குரல்! கேட்கவே நெஞ்சை வலிக்கச் செய்தது!!

"எடேய், பொடிப்பயலே! என்னடா விழிக்கிறாய்...உன்னைத்தான் ..." உருவமற்ற குரல். எங்கிருந்து வருகின்றது என்று தெரியாது விழித்தான், பாலன். அக்குரல் மேலும் தொடர்ந்தது...

"...உன்னைப் பரிசோதிப்பதற்காகத்தான் இப்படியான ஒரு மாயவாசலை உண்டாக்கினேன். குப்பைக்குள் கிடக்கிற நாயைத்தூக்கி மடியில் வைத்தாலும் அது குப்பையை நோக்கித்தான் ஓடும் என்பதை நீ நிரூபித்துவிட்டாயடா! நீயும் மற்றவர்களைப்போல..." எதையோ சொல்லக் கூடாததைச் சொல்லிவிட்டதுபோல் நாக்கைக் கடிக்கும் ஒலி கேட்டது. மறுகணம் அதே குரல்... ஆனால் மிகவும் சாதுவாக ஒலித்தது. அதில் பழைய கொடூரமில்லை.

"தம்பி, பாலா! இன்று இரவு உன்னை நான் வேறொரு இடத்திற்குக் கூட்டிக்கொண்டு போகப் போறன். என்ர கண்ணல்ல, நான் சொல்லுறபடி நடக்க வேணும். எல்லாம் உன்னுடைய நன்மையைக் கருதித்தான் ...... இன்றையிலிருந்து ஐந்தாம் நாள்...ஆகா அன்றுதான் என்; ஏன் எங்களிருவரதும் மனோரதம் கைகூடும் நாள். அதற்குள் நீ ஒன்றும் தப்புத்தண்டா செய்துபோடாதே, என்ன!"

"அன்பு கலந்த, எவ்வளவு இனிமையான குரல்! எவ்வளவு பற்றுதல், இதுவல்லவோ அன்பு..." இன்னும் ஏதோ வெல்லாம் எண்ணினான் பாலன்.

உடலெல்லாம் வலித்தது. அசதியாக இருந்தது. அப்படியே தூங்கிவிட்டான்,பாலன். இதுவரை நடந்தவற்றையெல்லாம் மறந்து, எங்கிருக்கின்றோம் என்ற நினைவேயின்றி தன்னை மறந்து ஏன் இவ்வுலகத்தையே மறந்துபோய்த் தூங்கினான், பாலன்.

(தொடரும்)

## வானவில்

— செ. மகேந்திரன் —

வானத்திலே ஒளி
வில்லாம்! - இது
வட்டமாய் வானை
வளைத்த நல் வில்லாம்!
மானென என் மணித்
தங்கை - துள்ளி
மகிழ்வுட னடியே
பார்த்தநல் வில்லாம்!

கானவர் கையுறை
வில்லோ? - வீரர்
கன்னன அருச்சுனன்
இராமரின் வில்லோ?
மானினை வீழ்த்திடும்
வில்லோ? - எந்த
மன்னுயர் நாட்டினைக்
காத்திடும் வில்லோ?

வண்ணப் பலநிற
வில்லாம்! - இது
வானதிற் தோன்றி
மறைந்திடும் வில்லாம்!
மண்ணுறை மக்களே
பாரீர்! - இந்த
மாபெரும் வில்லொரு
வானவில் கேளீர்!

வெய்யில் மழை முகில்
மோத - எழில்
விந்தைப் பலநிற
வானவில் தோன்றும்
கையிற் பிடித்திட
மாட்டீர் - இந்தக்
காட்சியில் வாழ்வு
தெரிந்திடும் காண்பீர்!

---

விநாடிக் கதை

## பசையோ பசை

— குகன் —

"தம்பி......தம்பி...... கொஞ்சம் பசைகொண்டுவாடா.இந்த விட்டுப்போன புத்தக அட்டையை ஒட்டவேண்டும்."

மகன் தேடுகின்றான். அதோ குரல் கேட்கின்றது.

"அ பா... அப்போவ்! பசை இல்லையப்பா, போத்தல் வெறுமனே இருக்கின்றது. அம்மா புதிதாகக் கிண்டிய பசை இருக்கின்றது. கொண்டு வரட்டுமா?"

"சரி, கொண்டுவா"

புத்தகம் ஒட்டப்படுகிறது. மனைவி வருகிறாள்.

"என்னங்க, என்ன விஷயம், தகப்பனும் மகனுமாக ......"

"புத்தக அட்டை விட்டுப் போய் விட்டது. அதுதான் நீ கிண்டிய பசையால் ஒட்டுகின்றோம். பசை நல்லாய்த் தான் இருக்கின்றது. மணம் தான் ஒரு மாதிரி......"

"என்ன, பசையா? ஐயையோ!அது உங்களுக்கு இராச் சாப்பாட்டுக்குக்கிண்டி வைத்த உப்புமாவல்லவா?"

"! ?........"

## தாத்தாவும் குழந்தையும்

— ச. வே. பஞ்சாட்சரம் —

தாத்தா வாய்க்கும்
பல்லில்லை!
தம்பி வாய்க்கும்
பல்லில்லை!
தாத்தா என்றாற்
பெரியவர்!
தம்பி என்றாற்
சிறியவன்!

•

தாத்தா மண்ணில்
தவழ்கின்றார்!
தம்பி கூடத்
தவழ்கிறான்
தாத்தா என்றாற்
பெரியவர்
தம்பி என்றாற்
சிறியவன்

•

தாத்தா கதை
இனித்திடும்
தம்பி பேச்சும்
இனித்திடும்
தாத்தா என்றார்
பெரியவர்
தம்பி என்றாற்
சிறியவன்.

# உத்தியோக நாற்காலி

— மருதூர்க்கொத்தன் —

மனம் சாந்தியால் நிறைந்து வழிகின்றது. போகும் போது புலனைத் தாக்காத சௌந்தர்யங்களெல்லாம் இப்பொழுது எவ்வளவு குழைவுடன் விருந்தளிக்கின்றன.

எலுமிச்சம் பழநிறத்து அழகியின் முகவெழில் காட்டி, மடல்கள் விரித்து மன்றல் கமழ்ந்து சிரிக்கின்றன தாழை மலர்கள். தாழை மரங்களோ நிறைமாதக் கர்ப்பிணியின் சாயலில். செம்மஞ்சள் பூத்து மோகனப் பொலிவு காட்டுகின்ற தாழம் பழங்களிலொன்றில் கண் பதிக்கின்றேன். மடக்கென்ற தொனியோடு சுளை பிணைப்புவிடுகின்றது. 'மடக்', பொறுப்பற்ற ஒற்றைக்கண் விமர்சனங்கள் ரசிகர் இதயத்தை ஒடிப்பது போன்ற துன்பவேதனையைத் தான் ஊட்டுகின்றது. சுளையின் முகிழ்ப்பாசத்தைப் பற்காற் கோதுகிறேன், இனிக்கிறது; நன்னாரியின் மணங் கூடக் கமழ்கிறது. இனிமையும் மணமும் உள்ள தாழங்கனியின் தொய்வுதான் நாக்கிலே மசாறிவை ஊட்டுகின்றதோ? நாவிற்றின வெடுக்குந் தாழங்கனியிலிருந்தும் சுதேச வைத்தியர்கள் தைலம் வடிக்கத்தான் செய்கிறார்கள்.

தளிர் நாக்குகளை நீட்டிக் கிறவல் பாதைக் காதலனைத் தழுவத் தவித்து, இரு மருங்கும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை படர்ந்திருக்கும் அடம்பன் கொடிகளின் மரகதப் பசுமை சாந்திகுடிகொண்டுள்ள என் மனத்தையே பிரதிபலிக்கின்றது.

அந்த ஏழைக் குடியானவர்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறி, நிவாரணம் பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளிக்கும்வரை நான் பட்டபாடு. என்னையேமறந்தநிலையில் அவர்களுக்குக் கூறியவார்த்தைகள்...வார்த்தைகளா அவை? இதயக் கமலங்களைச் சல்லடை துளைக்கும் கொடுங்கணைகள். வார்த்தைச் சரங்கள் இதயங்களைப் பிய்த்து வண்ணத்திவிட்டு விளையாடி விட்டன என்பதை அவர்களின் பரிதாபமான தோற்றமே புலப்படுத்துகின்றது.

கடற்காற்றின் மெல்லோசையைப் பாட்டாக வரித்துப் பரதம் பயில்கின்ற ஊதாநிற அடம்பன் பூக்கள், என்னையே நகைக்கின்றன; இடித்துக் கேட்கின்றன. "நீயொரு மேலதிகாரியா? பூவினும் மெல்லிய இதயம் படைத்த எழுத்தாளனா? நீ வாணியின் கடைக்கண் வீச்சில் இறங்கி உனது சிருஷ்டியில் உன்னை இழந்திருந்தாய் என்பது கொடுமையிலடிபட்ட ஏழைகளுக்கு என்ன தெரியும். நீர்ச்சுழிப்பிலே சிக்கி, பற்றுக்கோடு கேட்டுத் தவித்தவர்களின் தலையில் பாருங் கல்லையல்லவா தூக்கிப் போட்டுவிட்டாய்" என்று கேட்பதாக உணர்வு தட்டுகிறது.

மலர்களே! என்னைச் சுடாதீர்கள், நான் தான் பிராயச்சித்தம் தேடிவிட்டு வருகின்றேனே. தெருவின் வளைவில் கிறுகி, ஊருக்குள் செல்லும் பாதையில் நடை தொள்ளுகின்றேன். தெருவை அடுத்த தோப்பில் மாந்தளிர் கோதும் குயிலின் மாங்கனிச்சாறு பிழிந்த கானம் என்னைத் தேற்றுகிறது. சற்றுமுன் குடியானவர்களைச் சந்தித்தபோது போர்க்களமாக இருந்த மேற்குவானம் ரோஜா மலர் பரப்பிய படுதாவாகத் தோற்றுகிறது.

நேற்றிரவு ஊரெல்லாம் அடங்கிய நேரம் சோபாவில் அமர்ந்த, யூ. ஜி. நோவலின் நாடகத்தோடு ஐக்கியமாகிக்கிடந்த மனைவியும் கொட்டாவிவிட்டவாறே புத்தகத்தை மடித்து மேசைமீது போட்டுவிட்டு நகர்கின்றாள்.

"செப்புத்தகடடித்துச் செப்பனிட்ட தரைபோல், மாணிக்கக் கரைகட்டி மடைதிறந்த நெருப்பாற்றை அதன் மத்தியிலே ஓடவிட்ட அழகுபோல்... அழகுபோல் ...... அ ழ கு...... போல்...போ...ல்...!" தன்னறையிலே கிடந்து கட்டபொம்மனாய் நடந்த வேலைக்கார அப்புவும் நித்திரைக் கணிகையின் ஆலிங்கனத்தில் தன்னை இழந்து விடுகிறான். அடுத்த அறையிலே 'தேவியும் தவமிருந்து' கதையைப் பிரதி எடுத்துக்கொண்டிருந்த கவிகாரப் புதல்வனின் ஊசாட்டமும் அடங்கிவிடுகின்றது. அவர்களுக்கோ இரவு ஐம்பது வயதைத் தாண்டிவிட்டது. எனக்கோ...இரவு இளமையோடு இருக்கின்றது. எனக்கு அவள் எப்பொழும் மார்க்கண்டேய வரம்பெற்றமங்கைதான். வாணியின் கடாட்சத்தில், உணர்வு நிலைத்தோய்வில் நல்லதையே விரும்பும் பாவலர் உள்ளம் நிகர்த்த வெள்ளைத் தாளை ஊற்றுப் பேனாவின் கரிய மசியால் நிரப்பிக் கொண்டிருக்கின்றேன். அமுதமும் நஞ்சும் கலந்து வாழ்வாவது போல, வெள்ளைக் காகிதமும் கரிய மசியும் சேர்ந்து இலக்கியமாகிக் கொண்டிருக்கின்றது.

மச்சங் கொணர்ந்து மாந்தர் தம் பசிபோக்கத் தொடுவானுக்குத் தோணியோட்டிச் சென்ற வாப்பா, அறுசுவை உண்டி அளவாக உண்ட சுகதேகியின் வயிறுபோல மீன் நிறைந்த வள்ளத்தில் கம்பீரமாக வீற்றிருந்து வரும் வரவை எதிர்பார்த்தவளாய் தாழை நிழலில், பச்சரிசி பரப்பியது போன்ற வெண் மணலில் கொலு வீற்றிருக்கிறாள் ஆமினா.

நிமிடங்கள் கரையக் கரையத் தாளும் ஒன்றன்பின் ஒன்றாக நிரம்பிக்கொண்டே போகின்றன.

அதே தாழையின்கீழ் அதே வெள்ளைமணலில் உட்கார்ந்திருக்கிறாள் ஆமினா. அரசிகள் தாமே வீற்றிருப்பார்கள். அவளின் மடியிலே மதலை. எருமை உழக்கிய பங்கயமாக அவள் வதனம் வாடிப்போய்க் கிடக்கின்றது. வாப்பாவின் வரவை நோக்கி உட்கார்ந்திருக்கின்றாள்.

எனது கண்கள் கசிந்த பிழிவு, கொலுவிருந்தாள்என்ற சொற்களிலே கொட்டிவிடுகின்றன. பேனாவைத் திறந்த கோலத்தில் மேசையில் வைத்துவிட்டு கதிரையில் கிடந்த துவாயால் கண்களை ஒற்றி எடுக்கின்றேன்.

"ஐயா!"

பரிதாபமான கெதியில் வெளியே இருந்து ஒரு குரல்.

"ஐயா! ஐயோவ்"

வெளிவாயில் விளக்கின் பொத்தானை அழுத்திவிட்டு வாயிலுக்குச் செல்கின்றேன். விளக்கு பக்கென்று பற்றிய போது வெளிவாயில் பகுதியில் வியாபித்த வெளிச்சம் என்னைக் கண்டதும் அவர்கள் வதனத்தில் பொலிந்த தேஜசுக்கு எங்கே ஈடாகப்போகின்றது.

"என்ன இந்த நள்ளிரவில்?"

நல்ல உத்தியோகம், நேரங் காலந் தெரியாமல் தொல்லை கொடுக்கிறார்களே என்ற எண்ணச் சுழிப்பில் நான் சற்றுக் கடுமையாகத்தான் கேட்கின்றேன்; ஒருவன் பேசுகிறான்.

"ஐயா! அந்த வகுத்தெரிச்சலை என்னென்டு சொல்லுவேன் ஐயா. குஞ்சுங்குராலுமான எங்கட புள்ளயள் ஒண்ட இடமில்லாம நடுங்கிப்போய் நிக்கிதுகளையா. எங்கரெண்டு பேர்ர குடிசைகளக்கடல் எடுத்திற்றையா"

"அவ்வளவு கடலோரத்திலயா குடிசை கட்டினீர்கள்?" என்று உத்தியோக ரீதியிற் குறுக்கு விசாரணையிலீடுபடுகின்றேன்.

"இல்லை ஐயா, ரோட்டையும் கடலரிச்சி, ரோட்டுக்கிங்கால இருந்த குடில்களையும் எடுத்திற்று. வருசா வருசம் அவடத்தில கடல் கொந்தளிக்கிறதான் ஐயா. இந்த வருசம் இப்புடி நடத்திற்று. ஆராரு செஞ்ச புண்ணியமோ எங்க உசிர்தப்பிவிட்டம்"

நனைந்த ஆகிருதியுடன் சால்வையைக் கம்முக்கட்டில் இடுக்கிக்கொண்டு கூனிக்குறுகிக் கேள்வி அடையாளத்தில் நிற்கிறார்கள். அவர்களின் பரிதாபகரமான தோற்றம் நான் செயற்கையாக வருவித்துக்கொண்ட கடுமையை எங்கோ போக்கடிக்கின்றது. அவர்களைத் தேற்றி முறைப்பாடு எழுதி விதானையிடத்திலும் கையெழுத்துவாங்கிக்கொண்டு நாளை கந்தோருக்கு வருமாறு கூறிவழியனுப்புகின்றேன்.

வீட்டுப்படலை அண்முகிறது. முற்றத்திலே நிற்கிறேன். முற்றத்தில்தான் எத்தனை வகையானமலர்கள். பொழுதுமடங்கி பூக்கள் வாடித்தலை கவிழ்ந்து தொங்குகின்றன. துயரத்தால் அடிபட்ட ஏழைகளைப் போல அவைகள். முற்றத்திலே கிடந்த பிரம்பு நாற்காலியில் அமர்கின்றேன். பூக்களின் எழில் பருகுவதே ஆனந்தந்தான். ஆனால், பொழுது மடங்கிப் பூக்களின் வாடிய தோற்றம் முட்கம்பிச் சுருளை நெஞ்சத்துள் பாய்ச்சிவிடுகின்றன.

இன்று பின்னேரம் காரியாதிகாரிக் கதிரையில் அமர்ந்து தஸ்தாவேஜுகளுடன் கலந்திருக்கின்றேன்.

"ஐயா வணக்கம்" என்ற குரல் கேட்கிறது. கனிவோடு கூடிய பணிவு குரலிலே கலந்திருக்கின்றது. தலையை நிமிர்த்தியவாறு பதில் வணக்கம் கூறிவிட்டு, இருக்கை காட்டுகின்றேன். நான் கொஞ்சக் காலமாகச் சந்திக்கக் காத்திருந்து சமீபகாலத்திற்தான் அந்த வாய்ப்புக் கிட்டிய, துடிப்பும் நிறைவும் வாய்ந்த ஓர் இளம் எழுத்தாளன் அவர். சங்கோஜத்தோடு கூடிய பணிவுணர்வோடு இருக்கையேற்றுக் கொள்ளுகின்றார். இலக்கிய மன்னனான என்னோடல்ல, கல்முனைக் காரியாதிகாரியோடு பேச வந்த விடயம் பேசப்பட்டு முடிவடைகின்றது. பேச்சுவாக்கில் இலக்கியம் பற்றி இரண்டொரு வாக்கியங்கள்...

சுயாதீனத்திற்கு தளையிடும் இந்த உத்தியோகத்தை இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் கட்டியழுவதோ? நண்பர்களும் இலக்கிய அன்பர்களும் தோழமையோடு நெருங்கக்கூசுகிறார்கள். பேசும் வார்த்தைகளையெல்லாம் இலக்கியமாகவே பேசவும், கேட்கும் பேச்சுக்களையெல்லாம் இலக்கியமாகவே கேட்கவும் அவாவுகின்றேனே. இந்தஅவா நாளெல்லாம் நிறைவேறாவிட்டாலும் ஒரு சில மணித்தியாலங்களாவது நிறைவேறுகின்றதா? இதற்கெல்லாம் பரிகாரமாக பழையபடி கறுத்தக் கோட்டை மாட்டவேண்டியதுதான் என்று சதா குதிர்ந்து கொண்டிருந்த எண்ணத்தில் உறுதிப்பாட்டை ஊட்டுகின்றது எழுத்தாளரின் சந்திப்பு.

எழுத்தாளர் விடை கொள்ளுகின்றார். இருந்த இரண்டொரு 'பைல்'களைக் கைவிரல்கள் புரட்டுகின்றன. சிந்தையோ, காரியாலய அறையை - கல்முனையை - நீசஉலகையே தாண்டி... மனமென்ற வெண்திரை விதானத்தில் நாடகக் காட்சிகள் விரிகின்றன.

உலகத்துப் பேரழகிகள் பிச்சைவாங்கும் அபார சௌந்தர்யவதியான மச்சாளின் மதிவதனம் பொலிகின்றது. அந்த அழகுத் தெய்வதத்தை அவள் மைத்துனன் லயித்த கண் பெயர்க்காது பார்க்கின்றான். அவன் அன்புக் கடிதலாக, 'போடா... குரங்கு! சனியனே!...'

அவள் காலமெல்லாம் காத்திருந்த அத்தான், பணத்துக்காக வேறொருத்தியைக் கைப்பிடிக்கின்றான். இழுமென் ஓசைத் தமிழாள் அவள் நாவில் நர்த்திக்கமறுக்கின்றாள். மைத்துனனின் பிஞ்சு இதயம் கொல்லன் கொப்பரையாகக் கொதிக்கின்றது.

"ஐயா! நாங்கதான்... நாங்கதான் ஐயா குடிசையைக் கடலெடுத்தவங்க" என்ற குரல் கிணற்றுக்குள்ளிருந்து பேசும் சுரத்தில் செவிப்பறையைத் தீண்டுவதான உணர்வு தட்டுகின்றது. கற்பனைச் சரடுகளில் இவர்ந்து கொண்டிருந்த என் சிந்தனை வண்டியை தடம் புரட்டும் வலிமை அதற்கு இருக்கவில்லை. மீண்டும் மீண்டும் அதே வார்த்தைகள் ஒலிக்கின்றன. என்னையே மறந்து அதிர்ந்து கொட்டுகின்றேன். "உங்களை யார் கடலோரத்தில் வீடுகட்டச்சொன்னது?" மனமோ இலவுகாத்த கிளியான மச்சாளுக்காக அழுது வடிக்கின்றது. திடீரென்று சுய உணர்வு பெறுகின்றேன். கண்ணாடித் துண்டுகளை இதயத்துள் கொட்டிவிட்டது போன்ற நெருடல் வேதனை தட்டுகிறது. நிமிர்ந்து பார்க்கின்றேன்; யாரையும் காணவில்லை. மேசை மணியில் கைபதிகின்றது. பியோண் மாடியிலிருந்து திடுக்கிடுத்து வருகின்றான்.

"அவர்களை அழைத்துவா!"

"எவர்களை ஐயா" என்று இழுக்கின்றான்.

"சற்று முன் இங்கே வந்தவர்களை" - காரியாலயமே அதிர இரைகின்றேன். அவனும் காரியாலயமெல்லாம் ஓடி அலைகின்றான். எழுந்து செல்லு

பார்க்கின்றேன். நேரமோ காரியாலயம் கலையும் நேரமானதால் காரை எடுத்துக்கொண்டு விரைகின்றேன். வீட்டிலே காரைப்போட்டுவிட்டுப் பொடி நடையாக நடக்கின்றேன். காண்பவர்களிடம் விசாரித்த வண்ணமே விரைகின்றேன். அகதிகளாக நின்ற அந்த இருகுடும்பத்தினரையும் பார்த்தபோது; ஐயோ! என்ன பரிதாபம். ஓய்ந்த போர்க்களம் போன்றிருந்த செவ்வான் அவர்கள் விழிகளின் முன் எம்மாத்திரம்.

பிரம்பு நாற்காலிக்குச் சுளுவைக் கொடுத்து எழுகின்றேன். மரமுந்திரிகைப்பருப்புப் போன்ற பத்தாம் பிறையின் பால் வெள்ளத்தில் மூழ்கி பந்தல் முல்லைகள் மோகனமாகச் சிரிக்கின்றன.

(யாவும் கற்பனை)

## ஞாயிறு கதை மலர்

## ஏதே செப்புவேன்!

— சக்தீ அ. பாலையா —

மதுர அமுதம் நிரப்பி
என்
மனது கொண்ட
வாழ்விலே
புதுமை கோடி இன்பமே
பொங்கி எழவுஞ்
செய்தனை.

அமுதக் கிண்ணிநிறைந்த
பின்
அதனை வடித்துக்
கொண்டபின்
அமுதத் தேனைப் புதிய
தாய்
அதிற் சுரக்கச்
செய்தனை.

முடிவில்லாத வாழ்க்கை
யில்
முழுதும் நினது
பார்வையே
படிந்து மலர்ந்து
வளர்ந்திடும்
பலத்தைக் காணச்
செய்தனை.

எல்லையற்ற நின்னருள்
எங்கு மெதிலும்
காண்பதால்
இல்லை என்ற சிறுநிலை
எனைத் தொடாமற்
செய்தனை.

இத்தனை இத்தனை
இன்பமும்
எனக்கருளிச்
சேர்த்தனை
சித்தகம் சூழும் நின்
தகைச்
சிறப்பை ஏதே
செப்புவேன்.

## என்னருந் தமிழே!

— கொக்கூர்க்கிழார் —

முன்னரிந் நாட்டு
வாழ்ந்த
முதுதமிழ்ப் புலவ
ரெல்லாம்
பன்னரு மினிமை மிக்கப்
பழந்தமி ழூலிற்
றேறிச்
சொன்னயம் பொருண
யங்க
டோன்றுநன் னூற்செ
றித்தே
என்னருந் தமிழே
யுன்றன்
எழினலன் காத்து
வந்தார்.

அன்னவர் வழிநின்
றுன்றன்
அருமையை நுணுகி
யாய்ந்து
மன்பதை யாண்டு
முன்போன்
மாண்புடன் வயங்க
வைக்க
இந்நிலப் பரப்பில்
யாரும்
இன்றிலை யென்று
லந்தோ
என்னருந் தமிழே
யுனை
எவரினிக் காப்பா
ரிங்கே.

ஞாயிறு கதை மலர்

(வைகாசி ரோஜா)

★

டால்ஸ்டாய்எழுதிய

'மூன்று உண்மைகள்'

அடுத்த இதழ் முதல் வெளியாகிறது.

# ஞாயிறு கதை மலர்

## சித்திரை மல்லிகை

# சித்திரா பூரணை

— 12 —

இளவேனிலைத் தொடர்ந்து, முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி எனும் பருவங்கள் மறைந்தன; இளவேனில் மறுபடியும் புத்திளமையுடன் மலர்ந்தது; என் வாழ்வு மலரவில்லை. கைகளிலே ஒரு அழகுமதலை தவழ்ந்தான். 'கண்ணே! உன் தந்தைக்காகக் காத்திருக்கிறேன்!... நீ உலகின் அழகெல்லாம் இணைந்து பிறந்திருக்கிறாய்...?' என வாய் விட்டுக்கூறி ஏங்குவேன்.

"'பாண்டியர்கள் முறியடிக்கப்பட்டார்கள்' என்ற செய்தி என் காதுகளில் தேவாமிர்தமாகப் பாய்ந்தினித்தது; காத்திருந்ததற்குப் பலன் கிடைக்கப்போகிறது அவர் இனி என்னைத்தேடி வருவார்" என மகிழ்ந்தேன்.

ஆனால்...?

இவ்வளவு நேரமும் தன் கதையைக் கூறிவந்த அந்த ஆவியுருமங்கை, கூறிய கதையை நிறுத்திவிட்டு, அழத் தொடங்கினாள்; அவள் குரலில் பிரிவின் சோகமெல்லாம் ஒலித்தது. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை; வானத்தை அண்ணாந்து பார்த்தேன்; வெள்ளிகளின் கண்சிமிட்டலிடையே மதியோன் அடிவானத்திற் சாய்ந்திருந்தான். தண்கதிர்கள் அவள் கண்களில் விழுந்ததால், கண்ணீர் முத்தென ஒளிர்ந்தது. அம்மங்கை அழுவதை நிறுத்தவில்லை.

"தாயே! நீ அழுவதைக் காண என் கண்கள் கலங்குகின்றன! போர் முடிந்ததின் பின் சோழ இளவரசன் கிள்ளிவளவன் உன்னை நாடி வரவில்லையா...?"

அவள் என்னை நிமிர்ந்து பார்த்துவிட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"அவர் வரவில்லை!... காத்திருந்து காத்திருந்து நான் ஏமாந்தேன்!... அதுமட்டுமல்ல அவர் வேறொரு பெண்ணை மணந்து கொண்டதாகவும் கேள்விப்பட்டேன். இதைக் கேள்விப்பட்ட என் தாத்தா கொதித்தெழுந்தார். என் தந்தை படைதிரட்டினார். நான் அவர்களைச் சாந்தப்படுத்தினேன்...! ஆனால் என்னை என்னால் சாந்தப்படுத்த முடியவேயில்லை...!"

"கிள்ளிவளவன் ஒரு துரோகி!..." என்று நான கூறினேன்.

இதைக் கேட்ட அவள் என்னை விழித்துப்பார்த்தாள்; கண்களில் கோபத்தின் சாயல் படர்ந்தது.

"அவரை அப்படிக் கூறாதே!..." என்று கத்தினாள்.

இந்தத் தமிழ்ப்பெண்களே இப்படித்தான்; என்னதான் அவர் தம் அன்புக்குரியவர் ஏமாற்றினாலும் பிறர் குறை கூறுவதை விரும்பமாட்டார்கள்.

"அவர் மிகவும் நல்லவர். போர்முடிந்ததும் அவர் என்னிடம் வந்திருப்பார்.... ஆனால், சமந்தகூடமன்னன் ஏரிலங்குருவன் திரும்பவும் என் வாழ்விற் குறுக்கிட்டான்...!"

"எப்படித்தாயே...?"

அவள் தன் கதையைத் தொடர்ந்து கூறுவாள்.

— 13 —

சமந்தகூட மன்னன் ஏமாற்றத்தோடு திரும்பிச் சென்றானல்லவா...? அவன் சும்மாவிருக்கவில்லை; அவன் தன்னைப் பற்றி பெரிதாக எண்ணியிருக்கவேண்டும்; தான் அழகனென்றும், வீரனென்றும் எந்தப் பெண்ணும் தன்னை மணக்க மறுக்கமாட்டாள்என்றும் அவன் திடமாக நம்பியிருக்கவேண்டும். அந்த நம்பிக்கையை நான் அவனை மணக்கமறுத்ததன் மூலம் உடைக்கமுடியவில்லை. நான் அவனை மணக்க மறுத்ததற்கு வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்றெண்ணி, என் நாட்டிற்குள் ஒற்றர்களை அனுப்பி அவன் ஆராயத் தலைப்பட்டான். மக்களிடையே என் விடயம் ஓரளவு பரவியிருந்ததால், அவனுக்கு உண்மைக்காரணந் தெரிய அதிக நாளாகவில்லை.

நாகநாட்டின்மீது சமந்தகூட மன்னர்களுக்குப் பொறாமை இருந்தது; திறைசெலுத்தும் நாடாகத் தங்கள் நாடு இருப்பதை அவர்கள் வெறுத்தனர்; அப்பொறாமையும், கையாலாகாத் தனமும் சேரவே, என் வாழ்க்கையைக் கெடுக்குந்திட்டம் ஒன்றைவகுத்தான், ஏரிலங்குருவன்.

போர் முடிந்ததும் என்னிடம் சோழ இளவரசர் வருவார், என்பதை அவன் நன்கு அறிவானாகையால் போர் முடிந்ததாகக் கேள்விப்பட்டதும் சோழநாடு சென்றான்.

— "விஷ்ணு" —

நாகர்கள் பொய்வேடம் போடுவதில் கெட்டிக்காரர்கள்; கிருத்திரகூட மன்னன் கிருத்திரிமவேடம் பூண்டான்; ஒரு சாரணரை வடிவைத் தாங்கிய ஏரிலங்குருவன் சோழ இளவரசனைச் சந்தித்தான்; தவசிகளுக்குப் பெருமதிப்பளிப்பவர்கள் சோழர்கள்.

"சுவாமி! தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்..." என்று அவர் கேட்டார்.

"அடியேன் நாகதீவிலிருந்து வருகிறேன், அப்பனே...?" என்றான் அவ்வஞ்சகன்.

"மணிபல்லவத்தில் இருந்தா?... அவ்விடம் ஏதாவது விசேடங்கள் உண்டா... சுவாமி?"

"கூறத்தக்கதாக ஒன்றுமில்லை! ஓ... ஒன்றுண்டு! அதை நீ அறிந்திருப்பாய் தானே?..."

"எதைச் சுவாமி?..."

"சமந்தகூடமன்னனை நாகதீவு இளவரசி பீலிவளை மணந்து கொண்டதை!..."

என் இளவரசர் இதை உண்மையென்று நம்பினார்; சாரணர் ஒருகாலும் பொய் சொல்லமாட்டார்கள் என்று திடமாக நம்பினார்; நான் தன்னை ஏமாற்றிவிட்டதாக எண்ணி, அவ் வெண்ணந்தந்த வேகத்தால் இன்னொருத்தியை மணந்து கொண்டார்.

என்னை அவர் ஏமாற்றிவிட்டதாக நான் எண்ணிக் கலங்கினேன்; சமந்தகூட மன்னனின் சூதினை நானறியவில்லை; அப்படியானால் இது எனக்கு எப்படித் தெரியும் என நீ கேட்கலாம்; இது தேவையற்ற கேள்வி. ஆவியுலகில் ஏரிலங்குருவனே இதை என்னிடம்கூறி மன்னிப்புக கேட்டுக்கொண்டான். இன்னும் என் வரலாற்றிற் சிறு பகுதியுண்டு; அதையும் கேள்.

— 14 —

'அவர் வருவார், வந்து எனக்கு மாலையிடுவார்' என்று காத்திருந்து காத்திருந்து என் கண்கள் பூத்தன; மாலைவேளைகளில் கடற்கரையில் நின்று சோழநாட்டின் திக்கை நோக்கிக் கண்ணீர் வடிப்பேன்.

"பிரபு! பேதையென்னை ஏமாற்றிக் கண்ணீர்க்கடலில் தள்ளிவிட்டீர்களே?..."

அவர் வேறொரு பெண்ணை மணந்து கொண்டதாக நானறிந்த போது என்னிதயமே வெடித்துவிடும் போலாகிவிட்டது; என் மனதின் கடைசி நம்பிக்கையும் அணைந்து, இருண்டது. இனி நான் வாழ்ந்து பயனில்லை என எண்ணினேன்; அப்படியானால் என் குழந்தை —?

அது அவர்குழந்தை; எப்படியும் அவரிடம் குழந்தையைச் சேர்த்துவிட்டு நானழியத் தயாரானேன்; குழந்தையை எப்படி அவரிடம் சேர்ப்பது என்றெண்ணிய போது என் தாத்தாவின் நினைவு வந்தது; தாத்தாவை அழைப்பித்தேன்.

தாத்தா சிறுகுழந்தைபோல 'விம்மி விம்மி' அழுதார்.

"அழாதீர்கள், தாத்தா!..." என நான் தேற்றமுயன்றேன். என்னால் முடியவில்லை.

"பீலி ...!"

என்னிதயம் வெடித்தது: "தாத்தா! நல்ல ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டு, உங்களை என்னோடு கூட இருத்தி வைத்து, எல்லாப் பணிவிடைகளையும் உங்களுக்கு நான் செய்யவேண்டும், என்று கனவு கண்டேன், தாத்தா...!"—நான் விம்மினேன்.

"பீலி ...! உன் விதி இப்படியா ஆகவேண்டும்?..."

"வருந்தாதீர்கள், தாத்தா, நான் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன்! ஆனால், எனக்கு ஒரே ஒரு குறை ...?"

"என்ன, பீலி?..."

"என்குழந்தையை அவரிடம் சேர்ப்பிக்கவேண்டும்!..."

"யார் அந்தத் துரோகியிடமா...?"

"அவரை ஏசாதீர்கள் தாத்தா! என்ன விருந்தாலும் என் கரம் பற்றியவர்!... உங்கள் அன்பெல்லாம் எனக்கொருத்திக்குத்தான், என்று சொன்னீர்களே? அந்த அன்பின் மீது ஆணையிட்டுக்கேட்கிறேன், என்செல்வனை அவரிடம் சேர்ப்பித்து விடுங்கள், தாத்தா!..."

"சேர்ப்பிக்கிறேன், பீலி! நீயும் கூடவே வா! உன்னையும் அவரிடம் சேர்ப்பிக்கிறேன்!..."

நான் துடித்தெழுந்தேன்.

"நாகதீவு இளவரசி அவ்வளவு தூரம் மானங்கெட்டவள், அல்ல! ... என்னை ஏமாற்றியவரிடம் நான் வருவதா...?" என் பிடிவாதத்தைத் தாத்தா நன்கறிவார்.

"நீ வரவேண்டாம்! அவரை இங்கு நானே அழைத்துவருகின்றேன் ...!"

நான் வறட்டுச் சிரிப்புச் சிரித்தேன்.

தாத்தா என் குழந்தையுடன் மரக்கலத்தில் ஏறினர்; பாய் விரித்து மரக்கலம் சோழநாடு நோக்கி—காவிரிப்பூம்பட்டினம் நோக்கி, விரைந்த அதே நேரத்தில், நாகதீவின் மேற்குக்கடல் அலைகளிடையே நான் மிதந்து கொண்டிருந்தேன். என் வேதனைக்கு முடிவைக்கடல் அன்னை எனக்களித்தாள்.

— 15 —

ஆவியுருமங்கை எழுந்திருந்தாள்; அவளை நான் உற்றுப் பார்த்தேன்; கண்கள் கூசின; அவளே பேசினாள்:

"என் கதையைக் கேட்டாயல்லவா?... உனக்கு ஏதாவது சந்தேகமுண்டா?..."

"உண்டு ... உன் செல்வன் சோழ இளவரசனிடம் சேர்ந்தானா?"

அவள் என் கேள்விக்குப் பதிலளிக்காது தொடர்வாள்:

"நான் உயிரற்ற பிணமாகக் கடலில் தெற்கு நோக்கிமிதந்து கொண்டிருந்த அதே வேளையில் இதே போன்ற சித்திரா பௌர்ணமியில் என் குழந்தை என்தாத்தாவோடு தன் தந்தையைக்காண வேண்டி மரக்கலத்தில் வடக்கு நோக்கிச்சென்று கொண்டிருந்தான்.—அந்தோ... இருந்தாற் போலக் கடல் அன்னை குமுறி எழுந்தாள். அவளின் குமுறலுக்குக் காற்றரசன் கைகொடுத்தான், சூறாவளி சுழன்றடித்தது. அப்பயங்கரச் சூறாவளியிலே மரக்கலம் உடைந்தது! மரக்கலத்தினின்று விழுந்த தெப்பமொன்றில் என் குழந்தை தெய்வாதீனமாகத் தூக்கி எறியப்பட்டான்! ... தெப்பத்தில் கிடந்த என் செல்வனைக் கடலன்னை எடுத்துச்சென்றாள்! ...கடலின் குமுறலிடையே, காற்றைத் துளைத்துக்கொண்டு ஒரு குரல், 'பீலி!' என்று ஒலித்துத் தேய்ந்து ஒடுங்கியது! ..." என்று கூறிய அவள் நடக்கத் தொடங்கினாள்; கால் நிலத்திற் பாவாமல் நடந்தாள்.

'கலீர்... கலீர் ...' சிலம்பு ஒலித்தது; அதனிடையே, "நில்!..." என்று நான் கத்தினேன். "தெப்பத்தில் மிதந்த உன் செல்வன் என்னவானான் ...?"

அவள் பதில் கூறவில்லை; காற்றோடு காற்றாக மறைந்தே போனாள்.

'கலீர் ... கலீர் ...!'

என் கனவும் கலைந்தது.

(முற்றும்)

## ஓர் இன்பீற்றுப் பாநாடகம்

— "மஹாகவி" —

தலைவன் —

தொட்டென் துயிலைத் தொலைத்ததெதற்கோ, என்
கட்டுடல் கொண்ட கரும்பு?

தலைவி —

அத்தான், என் தொல்லை அதிகம்! இதோ அன்பு
முத்தம்: ஒழிவீர் முனிவு.

தலைவன் —

ஏதோ கனவுள் எழுந்தேன்; புதுக்கனவே,
தோதே இப் போதுன் தொடர்பு!

தலைவி —

வேண்டும் நும் காதல்; எனினும் விரும்புவேன்,
ஆண்டகையே! வேறொன் றழுது!

தலைவன் —

சொல்லம்மா; சொல்லச் சுவைவாய் குவியாமுன்
எல்லாம் அளிப்பன் எளிது;
வில்லன் எவனோ? விளம்பாய். விரைந்தவனைக்
கல்வி எறிதல் கருத்து!

தலைவி —

முட்டை முதுகினிலே தீண்டிற்; றதை முடிக்க
வேட்டை தொடங்குக என்வேந்து.

தலைவன் —

காட்டு மயிலே; கசக்கிப் பிழிந்திடுவேன்;
ஓட்டி விடுவேன்; ஓம் ... ஓம்!

தலைவி —

பாவம், நிசியில் எமைப் பள்ளி எழச் செய்ததன்றோ?
கோபம் போம் ஈது குறித்து;
பழி ஏன்? பரிவே பெரிதாம்! அது தன்
வழிபோம்; தருவீர் வரம்!

தலைவன் —

கண் நீ கலங்கிடுதல் ஒண்ணு; திரங்குவது
பெண்ணே, நினக்கழகு; பீடு!
அருள்வோமே! அஞ்சி அது ஓடும்; மிஞ்சும்
இரவோ, என் வஞ்சி, எமது!

இருவரும் —

கனவே நிகழ்ந்து, கதை போலும் ஒன்றி
இனி வாழ்வம் இன்றை இனிது!

அழகிய பெனியன்
கால்மேஸ் !!
"லேடன்"
தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில்
உற்பத்தியாகின்றன

LEYDEN

பல தினுசுகள்! பல அளவுகள்!! எங்கும்கிடைக்கும்

இன்றைய தேவை: சுதேசிப்பொருள் ஆதரவு
அதற்கு வழி 'லேடன்' பெனியன்கள்
கால்மேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு
பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது
'லேடன்' பெனியன்களும், கால்மேஸ்களும்

தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# கலை அரங்கம்

## எஸ். ஆர். கே. தோற்றி வைத்த ஓவியப் பரம்பரை

தெய்வீக இன்பம் அளிப்பது கலை. அத்தகைய இன்பக் கலையைப் போற்றி வளர்க்கும் உண்மைக் கலைஞனின் உருவமும் பண்பும் பிறருக்கு இன்பம் விளைப்பனவாக அமைய வேண்டியன முறையாகும். இப்படியான அமைவுகள் ஒருங்கே அமையப் பெற்ற பண்புக் கலைஞர்களுள் சித்திர ஆசான் திரு. எஸ். ஆர். கனகசபை முன்னேடியாகத் திகழ்ந்தார்கள். இவரை எஸ். ஆர். கே. என்று குறிப்பிட்டாற்ருன் நம் நாட்டவருக்கு நன்ருகத் தெரியும். இவரது மலர்ந்தமுகமும் களிப்பூட்டும் ஹாஸ்யப் பேச்சும் எல்லோரையும் மகிழ்வூட்டி வந்தனவெனில் அது மிகையாகாது.

நல்லைக்குறவஞ்சிதந்து தமிழ் வளர்த்த திரு. சேனதிராய முதலியார் உதித்த ஊராகிய இருபாலையைத்தான் கலை வளர்த்த திரு. கனகசபையும் பிறப்பிடமாகக் கொண்டார். கவின் கலைகளுள் ஒன்ருகிய சித்திரக் கலையில் விசேடம் பெற்று விளங்கிய இவர் திருநெல்வேலி, பரமேஸ்வராக்கல்லூரியிற் சித்திர ஆசிரியராக முதன்முதற் கலைப்பணி புரியத் தொடங்கினர், அங்கு இவர் செய்த கலாசேவையின் காரணமாக திரு. சேர். பி. இராமநாதனின் அன்பு இவருக்குக் கிடைத்தது. அவரதன் பின்பெறு பேருகக் கலாவித்தியா தரிசியாகப் பதவி உயர்வு பெற்ற திரு. எஸ். ஆர். கே. நம் தமிழ் நாடாகிய யாழ்ப்பாணக் குடாநாட்டின் எல்லாமூலை முடுக்குகளிலுமுள்ள பாடசாலைகளிலும் சித்திரக்கல்வி புகட்டப் படவேண்டும் என்று எண்ணங்கொண்டார். அதற்கான முயற்சிகளையும் காலத்திற்குக் காலம் செய்துவந்தார்.

மாணவர்களின் இரசஞான உணர்ச்சிகளைச் சித்திரங்களாகத் தீட்டுவித்தால் மட்டும் போதாது. அச்சித்திரங்களைக் காட்சிகளில் வைத்து ஊக்கங் கொடுத்தாற்ருன் கலைவளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்றஉண்மையை இவர்நன்கு அறிந்திருந்தார். ஆகவே நாட்டின் நாலா பக்கங்களிலும் சென்று மாணவர்களினதும் மற்றவர்களினதும்கலைப்படைப்புக்களை ஒன்று சேர்த்துக் காலத்திற்குக்காலம் கலைக்காட்சிகளை நடாத்திவந்தார். அங்கு வைக்கப்பட்ட சிருஷ்டிகளைத் தக்க முறையில் விமர்சனம் செய்து, ஆய்வுரைகள் நிகழ்த்தி, தகுந்த பரிசில்களை வழங்கி, வளருங்கலைஞர்களை வளம்படுத்தி வந்தவர்களுள் இவர் சிறந்து மிளிர்ந்தார். கலாவித்தியா தரிசி என்றதோரணையில் விடுமுறைக் காலப் புத்தூக்க வகுப்புக்களைக் கூட்டி ஆசிரியர்களையும் புத்துணர்ச்சியுடன் கலைவளர்க்கத் தூண்டி வந்தார். இத்தகைய புததூக்க வகுப்புக்களுள் 1954-ம்ஆண்டு ஸ்ரான்லி மத்திய கல்லூரியில் நடாத்தப்பெற்ற புத்துணர்ச்சி வகுப்பு சிகரம் போன்று அமைந்து விளங்கியது. இவ்வகுப்பைச் சிறப்பிக்கும் பொருட்டு, பிரதம கலாவித்தியாதரிசி திரு. பீலிங் உட்பட, அகில இலங்கையிலுமிருந்து கலைச் செல்வர்களாகிய சித்திர வித்தியாதரிசிகள் யாவரையும் கொணர்ந்திருந்தார். அங்கு புதுப்புதுச் செய்கை முறைகளையும், படிப்பித்தல் முறைகளையும் அவர்களைக்கொண்டு சித்திர ஆசிரியர்களுக்கு அள்ளி வழங்குவித்தார்.

இவ்வகுப்பிற் கலந்து கொண்ட நம்முட் சிலர் இவ்வளவு சிறப்புற இவ்வைபவத்தை எப்படித்தான் திரு. எஸ். ஆர். கே. செய்து முடித்தனரோ என்று வியந்தோம். அப்பொழுது "இது என்ன பிரமாதம்! தாய் நாட்டவர் வியக்கும் வண்ணம் பரமேஸ்வராக் கல்லூரியிற் கொண்டாடப்பட்ட தமிழ்விழா அமைப்புக் குழுவிலிருந்து அவ்விழாவைச் சிறப்புடன் மிளிரச் செய்தவர்களுள் இவரும் முக்கியம் வாய்ந்தவர் தானே", என்று பலர் கூறிஞர்கள். இதிலிருந்து கலைக்கு மாத்திரமன்றித் தமிழ் அன்னையின் வளர்ச்சிக்கும் இவர் ஆற்றிய பணி நன்கு புலப்படுகின்றது.

சித்திரக் கலையுடன் தொடர்புடைய சிற்பம் முதலிய கலைகளில் நாட்டமுடையவர்களையும் ஓரளவு ஊக்கப்படுத்திவந்துள்ளார். எனது தந்தையாராகிய திருநெல்வேலி சிற்பாசாரியருடனும் இவர் கலைத்தொடர்பு கொண்டிருந்தார். இதன் காரணமாக நான் இவரினல் நடாத்தப்பெற்றுவந்த வின்சர் கலைக்கழகத்தில் சேரும் வாய்ப்பு ஏற்பட்டது. கல்லூரிகளிற் கற்கும் சித்திரக்கல்வியுடன் நின்றுவிடல் நன்றன்று; அதை மென்மேலும் வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன்,

> "காவியம் செய்வோம் நல்ல
> காடு வளர்ப்போம்
> கலைவளர்ப்போம் கொல்லர்
> உலைவளர்ப்போம்
> ஓவியம் செய்வோம்......"

என்று பாட்டினிற்கோர் புலவன் கூவி அழைத்தது போன்று, ஓவிய இரசிகர்களை அழைத்து இக்கழகத்தை ஆரம்பித்தார். அன்று பிரதம சித்திர வித்தியாதரிசியாகப் பணிபுரிந்த திரு. வின்சர் திறப்புவிழாவைத் தொடக்கி வைத்தார். திரு. வின்சரிடம் எஸ். ஆர். கே. வைத்திருந்த மதிப்பின் காரணமாக அவரது நாமத்தையே இக்கழகத்திற்கும் சூட்டினர். எங்கள் காலத்திற்கு முன்னமே இக்கழகத்தின் மூலம் பலர் சித்திர ஆசிரியர்களாக வெளிவந்துவிட்டனர். இவர்கள் எஸ். ஆர். கே. ஓவியப் பரம்பரையினர் என்று பெருமையுடன் கூறிக்கொண்டு, நம் நாட்டுக் கலையுலகில் முன்னணியிற் றிகழ்கின்றனர். மற்றும் அரசினர் நுண்கலைக் கல்லூரிகளில் இரண்டு, மூன்று வருடங்கள் செலவிட்டும், சித்திர ஆசிரியர் தராதரப பத்திரப் பரீட்சையிற் சித்தியடைய முடியாது பலர் திண்டாடிக்கொண்டிருந்த பொழுது, குறுகிய காலப பயிற்சியின் மூலம் நம் போன்ற பலரை இவர் சித்திர ஆசிரியர்களாக விளங்க வைத்தார் எனில் அது மிகுபடு கூற்றன்று. இத்தகைய போதனைத்திறன் வாய்ந்த கனகசபை வித்தியாதரிசிப் பதவியுடன் சிலகாலம் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலும் ஆசிரியர்களுக்கு ஆசிரியராகவும் இருந்து வந்தார்.

மனிதனது அறிவு, ஆற்றல் பூரணத்துவம் அடையும்போது கலை அம்சத்தை வெளிப்படுத்த. அது துடிக்கும் என்ற றஸ்கின் கருத்திற்கமைய அறிவு, ஆற்றல் ஆகியவற்றின் பூரணத்துவத்தை இளமையிலேயே பெற்றுவிட்ட இவரது ஒவியப் படைப்புக்கள் தனித்துவத் துடிப்புடையனவாகவே மிளிர்கின்றன. ஒரு பானை சோற்றிற்கு ஒருசோறு பதம் என்னும் முதுமொழிககிணங்க, இவரது ஓவியங்களுள் பிதா லோங் உருவப்பட ஓவியம் பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளது. இப்படியாக நிர்வாகம், போதனை செய்கை ஆகிய பலதுறைகளிலும் சித்திரக் கலைக்கு இவர் ஆற்றியுள்ள சேவையைப் பாராட்டி இலங்கைக் கலாச்சாரப் பகுதியினர் 1960-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த கலை விழாவில் இவரைக் கௌரவித்தனர்.

அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில் என்ற வள்ளுவர் கூற்றிற்கிணங்க வாழ்ந்த இவரின் கலைப் பூரணத்துவத்தின் ஒளி யாழ்ப்பாணம் முழுவதிலும் பரவி பயனளித்தது என்ருல் எவர்தான் மறுப்பர். ஓவியத்துறையில் எஸ். ஆர். கே. அன்பையும் ஆதரவையும், ஊக்க மொழியையும், பயிற்சியையும் பெரும்பாலும் எல்லோரும் பெற்றுள்ளனர். இவர்கள் எல்லோரும் 'வாழ்வுகுறுகியது கலைநின்று வாழ்வது' என்னும் கருத்திற்கிணங்க இவரது பிரிவுத்துயரைத் தணித்து இவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பார்களாக.

— ஆ. தம்பித்துரை.

### திரு. எஸ். ஆர். கனகசபை அவர்களின் நினைவுமலர்

அண்மையில் சிவபதமடைந்த சித்திர வித்தியாதரிசி அவர்களை நினைவு கூரச்செய்யும் முகமாக திருமுறைப் பாக்களை திருமதி கனகசபை குடும்பத்தினர் வெளியிட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க விஷயமாகும்.

தோற்றமும் - மறைவும் மனிதருக்கு என்றும்பிரியாத நண்பர்கள். எது எப்படியிருப்பினும் திரு. கனகசபையவர்களின் திடீர் மறைவு அவருடன் பழகிய நண்பர்களையும் - உற்ருர் உறவினர்களையும் என்றும் பிரியாத துன்பத்தில் ஆழ்த்தியது.

ஆனல் திரு. கனகசபையின் தொண்டும் - அவரது சித்திரத் திறமையும் அவர் இன்றும் எங்கள் மத்தியில் இருக்கும் ஒருவராகக் காண்பிக்கின்றது. இளமையிலே திறமை படைத்த இவர் - சென்னைப் பட்டினச் சித்திரக் கலாசாலையில் முதன் முதல் கற்கச்சென்ற இலங்கை மாணவராவர். இதன் பின்னர் இலங்கைக்கு வந்து பல பாடசாலைகளில் கடமையாற்றினர். இக்காலத்தில் திரு. கனகசபை பலருடைய பாராட்டுக்களையும் பெற்ருர் என்பது இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தில் சித்திர நுண்கலையை தன்னுயர் வெறுப்பற்ற கலையாகமிளிரச் செய்த பெருமை திரு. கனகசபையைச் சார்ந்ததாகும். தான் கற்றகலையை தன்னுடன் வைத்துக்கொள்ளாது பிறருக்கும் கற்பித்து ஊக்குவித்த பெருமையும் அன்னருக்குண்டு.

இப்படியான நுண்கலைத் திறன் படைத்த பெரியார் எங்கள் ஈழத்திருநாட்டிலே இருந்தும் - அவரின் சேவைக்கும் - தொண்டிற்கும் நாம் யாது செய்துவிட்டோம்? சித்திரத்துறையில் ஆழ்ந்த அனுபவங் கொண்டவர்கள் இக்கலாயோகிக்கு என்ன செய்ய வேண்டும் என்று ஆராய்தல் சாலப் பொருத்தமுடையதாகும்.

—"திரு"

## பெய்யெனப் பெய்யும் மழை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும் பணியுடையாள் ஆகுவாள். இதனை முன்றுறையரயனர் என்னும் பெரியர்,

> "சொல்லாமை நோக்கி
> குறிப்பறியும் பண்பில் தம்
> இல்லானே வந்த விருந்
> தோம்பிச் —செல்வக்
> திடரின்றியேமாந்திருந்தாரே
> நாளும்
> கடலுட்டுலாம் பண்ணிரை"

என எடுத்துரைக்கின்ருர்.

அன்றியும் தலைவனை அறநெறியிற் காத்து, அந்நெறியில் ஒழுகச் செய்வாள். தலைவன் ஆற்றும் அறங்களுக்கெல்லாம் ஆதரவாக நின்று அரும்பணி யாற்றுவாள். இத்தகையான இருககுமில்லம் அன்பும், அருளும் குலவி ஒளிவீசும்; அன்பும் அருளும் உள்ள இடமே இறைவன் கோட்டமாகும். அன்பும் அருளுமே இறைமை; அன்பும் அருளும் இறைமை. எனவே, அவையுடையாள் இறைமை நிலை எய்துகின்ருள். இதனையே வள்ளுவர் பெருமான் நமக்குப் புலப்படத் தெளிவாக உரைசகின்ருர்.

> "தெய்வம் தொழாள் கொழு
> நற் தொழு தெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை"

என்றும்

> "அன்பும் அருளும் உடைத்
> தாயினில் வாழ்க்கை
> பண்பும் பயனுமது"

என்றும்

> "அறத்தாற்றினில் வாழ்க்கை
> ஆற்றில் புறத்தாற்றில்
> போய்ப பெறுவதெவன்"

என்றும்

> "வையத்துள் வாழ்வாங்கு
> வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள்வைக்கப்படும்"

என்றும்

> "பெற்ருற் பெறிற் பெறுவர்
> பெண்டிர் பெருஞ் சிறப்புப்
> புத்தேளிர் வாழுமுலகு"

என்றும்

> "செல்விருந்தோம்பி வரு
> விருந்து பார்த்திருப்பான்
> நல்விருந்து வானத்தவர்க்கு"

என்றும்

> "முகத்தான மர்ந்தினிது
> நோக்கி அகத்தானும்
> இன்சொலினிதேயறம்"

என்றும் கூறுவன கொண்டு உய்த்துணர்ந்து அகல நோக்குமின்! விரித்தற்கு இடமஞ்சி விடுகின்ரும்.

கற்புடைப் பெண்டிர்க்குக் கடவுளே யடிமையாகிருன். அவள் எண்ணியாங்கு கடவுளே பணியாற்றுவான். கண்ணகி என் செய்தாள்? தீக்கடவுளை யழைத்தாள். சோமசுந்தரக் கடவுள் வீற்றிருந்த மதுரை—அறம் காத்து அருங்கலை வளர்த்த பாண்டிய மன்னர் தலைநகர்-தமிழணங்கிருந்து தாண்டவமாடிய தமிழாபுரி - அகத்தியர் முதலாம் அருந்தவ முனிவர்களும், சொன்னசொல் மாருச் செந்நாப் புலவர்களும் இருந்து தமிழாராய்ந்த இடம் இவற்றையெல்லாம் தீக் கடவுள் தன் கருத்தில் கொண்டானே? அத்தீக் கடவுளை எதிர்க்க வருணன் இல்லாமற் போயினனே? கண்ணகி கட்டளை பிறந்த அக்கணமே தீக்கடவுள் மதுரையைச் சாம்பராக்கினன். என்னே கற்பின் இறைமை, என்னே அதன் ஆற்றல்! பெண்மையின் பெருமையும் அதன் வழிவந்த கற்பின் திண்மையும், காட்சியளிக்கும் இடமன்ரே அறக்கடவுளின் ஆலயம். ஆதலின் அறம்பேணி உலகை ஆக்கும் சக்தியும் அறம் அழித்து உலகை அழிக்கும் சக்தியும் ஆகிய இருவேறு சக்தியும் சக்திகளாகிய பெண்பாலாரிடத்தேயே அமைந்துள்ளது என்பதைப் பண்டைத் தமிழ் மக்கள் நன்கு 'அறிந்தன்றே பெண்களைப் பேணிப் பெண்மை யறம் ஓம்பினர்.


REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3Shows. Sats.&Suns. Four
Rock Hudson — Doris Day
in
LOVER come BACK
(Eastman Colour)



சினிமாஸ் திரைகளில்
அடுத்த திரை விருந்து
எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
நானும் ஒரு பெண்
தென்னாட்டில் 125 நாட்களுக்கு மேல்
ஓடிய உன்னத தமிழ் திரை விருந்து
வெற்றிகரமான 7வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
மற்றும் 8 திரைகளில்

எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

22 ஸ்ரீ 9000 தொடர் இலக்க மொறிஸ் டீசல் லொறி 8½ தொன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு க. சிவலிங்கம், 29, மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். 405

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள, புதிய குஞ்சு பொரிக்கும் இயந்திரம் (Incubator) ஒன்று, மண்ணெண்ணெயில் இயங்குவதும், ஒரு முறையில் 200 முட்டைகள் பொரிக்கக் கூடியதும், விற்பனைக்கு உண்டு. கீழ்க்காணும் விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். S. சோமசுந்தரம், வியாபாரம், கருணை தெற்கு, (குஞ்சர்கடையடி) கரவெட்டி. 295

### கார் விற்பனைக்கு

சோமசெற் EL 8210 தொடர் இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: ச. ஸ்ரீஸ்கந்தராசா, பிருந்தாவனம் முள்ளானை, இளவாலை. 299

### வாடகைக்கு

நாவற்குழி அரசாங்க தானிய களஞ்சியத்திற்கு எதிரே கடையும் வீடும் வாடகைக்கு உண்டு. நேரில் விண்ணப்பிக்கவும். 403

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்
சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின்மென்ற்
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துளி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்.
GABRIELS,Chunnakam. 273

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றோர் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50
வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.


### நன்றி கூறுதல்

மலேயா ஆஸ்பத்திரியில் அப்போதிக்கரியாக கடமையாற்றி இளைப்பாறிய திரு நாகரத்தினம் சிவசம்பு 3-5-64-ந் திகதி காலமானார். திருமதி ஏ. சிவசம்புவும், மலேயாவிலுள்ள பிள்ளைகள் குணதாசன், லோகதாசன், புஷ்பம், லோகவதி ஆகியோரும் மற்றும் இங்குள்ள பிள்ளைகள் பவளவதி, திருபாலன், தனபாலன், ஞானம் ஆகியோரும் அவரின் மருமக்கள் திரு. சி. அருளம்பலமும் (தந்தி, தபால்பகுதி மலேயா), திரு. எஸ். இராசையாவும் (கல்ஓயா அபிவிருத்திச் சபை, இங்கினியாகல), அவரின் ஈமக்கிரிகைகளுக்கு சமூகமளித்த உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், சமூகமளித்து உதவிபுரிந்தவர்களுக்கும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். தனித்தனியே நன்றிகூறமுடியாமைக்கு வருந்துகிறோம்.

336, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 298


### COLLEGE OF COMMERCE & ACCOUNTANCY

இலண்டன் கணக்கியல் பரீட்சைகள், குருவித்தியாலய வர்த்தகப் பிரவேசப் பரீட்சை உட்பட சகலகணக்கியல் வர்த்தக பரீட்சைகளுக்கு ஏற்ற வர்த்தகப்பாடங்கள் அனைத்தும் குறைந்த செலவில் கற்றுக்கொடுக்கப்படுகின்றது.

ஆண், பெண் இருபாலாருக்கும் தினசரி முழுநேர வகுப்புக்கள் காலை 8-00 மணி முதல் பிற்பகல் 4-00 மணி வரையும் பிற்பகல் 4-00 மணி முதல் மாலை 9-30 மணிவரையும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

3 பாடங்களுக்கான மாதக் கட்டணம் ரூபா 15/-

முக்கிய கவனிப்பு:-

கிழமைநாட்களில் சமூகமளிக்கவியலாத மாணவிகளுக்கு சனி, ஞாயிறு ஆகிய இருநாட்களில் பிரத்தியேக முழுநேர வகுப்புக்கள் இடம் பெறுகிறது.

சிங்கள வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

விபரங்கட்கு கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

வர்த்தக கணக்கியல் கல்லூரி,
330, கே. கே. எஸ். வீதி,
(சீதா சோடா கம்பனிக்குமுன்)
402 யாழ்ப்பாணம்.

### வான் விற்பனவு

22 ஸ்ரீ 8236 இலக்கமுடைய, 2½ தொன் மொறிஸ் வியாபார வான் நல்ல நிலையில் விற்பனைக்கிருக்கிறது.

கிழமை நாட்களில் மு. ப. 9 மணி தொடக்கம் பி. ப. 5 மணி வரை மேற்படி வானை கீழ்க்கண்ட விலாசத்தில் பார்வையிடலாம்.

வான் வாங்க விரும்புவோர் தாம் கொடுக்கவிருக்கும் விலையைக் குறித்து, தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 16-5-64 பிற்பகல் ஒரு மணிக்குப் பிந்தாமல் அனுப்பிவைக்கவும்.

தலைவர்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
74/3 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
358

### விற்பனைக்கு

காட்சிஅறை நிலைமையில் உள்ள போட்சன் உழவுயந்திரம். விற்பனைக்குண்டு. இல: 22 ஸ்ரீ 6700ன் தொடர். எமது மில் வீதி காட்சி அறையில் பார்வையிடலாம். நவீன கமகைத்தொழில் கூட்டுத் தாபனம், மில் வீதி வவனியா, தொலை பேசி இல: 519.
406


## ஜி. ஸி. ஈ. பரீட்சை

கொழும்பு, சனி

ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்குரிய விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி இப்பொழுது நீடிக்கப் பட்டுள்ளது. விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய கடைசித் திகதி மே மாதம் 15 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் அறிவித்தபடி மே 9-ம் திகதியல்ல.

## நீதியரசர் காலமானார்

கொழும்பு, சனி

கடந்த சிலவார காலமாக சுகயீனமுற்றிருந்த நீதியரசர் திரு கிங்ஸ்லி ஹேரத் நேற்று காலமானார். இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறும்.

நீதியரசர் திரு. கிங்ஸ்லி ஹேரத் 1962-ம் ஆண்டு ஜனவரியில் சுப்ரீம்கோர்ட் நீதியரசராக நியமிக்கப் பட்டார்.

## ஜவுளி வர்த்தகம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'பெரிய முதலாளிகளுக்கு வழங்கப்படும் கௌரவ பிரஜா வுரிமைகளும் நிராகரிக்கப் படும். அவர்கள், பொதுமக்களை சுரண்டுகிறார்கள். வெளிச் செலாவணி மோசடியில் அவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். சென்னையிலும், ஹாங் ஹாங்கிலும் அவர்கள் அக்கறை செலுத்துவதால் இலங்கை குறித்து அவர்களுக்கு எந்த வித அனுதாபமும் இல்லை" என்றும் திரு பெரேரா கூறினார்.

வெளிநாடுகளிலிருந்து வருவிக்கப்படும், சாரம் இங்கு கள்ள மார்க்கெட்டில் இரட்டிப்பான விலைக்கு விற்பனை செய்யப்படுகிறதென்றும் திரு. பெரேரா குறிப்பிட்டார்.

இந்த வைபவத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா பேசுகையில், உதவி மந்திரி பெரேராவின் முயற்சிகளைத் தாம் பாராட்டுவதாகவும், ஜவுளி வர்த்தகம் தேசியமயமாக்கப்படுவது தமது நீண்ட நாள் ஆசையென்றும் கூறினார்.

## தனியாக....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களைவிட்டுவிட்டு தனியாகப் போய்ச் சேரமாட்டாதென திரு. பிலிப் குணவர்த்தன இரத்தினபுரியில் நடைபெற்ற ம. ஐ. முன்னணி வாலிப முன்னணிக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

# கூட்டரசாங்கம் நிறுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்டன் ரணராஜா, செங்கடகலை எம். பி.) ஸ்டான்லி மொலிகொட (கிவிட்டிகல எம். பி.) விஜயபாகு விஜயசிங்கா (மிரிகமை எம். பி) ஸ்டீபன் சமரக்கொடி (பொல்காவலை எம். பி. ஆகியோரே பிரதமரின் மகஜரை எதிர்த்து வாக்களித்தவர்களாவார்கள். முதலில் திருவாளர்கள் பி பி. விக்கிரமசூரியாவும், லக்ஷமன் டி' சில்வாவும் எவ்விதமான கூட்டரசாங்கமும் வேண்டாமென எதிர்த்துப் பேசினாலும் பின்னர் பிரதமர் சமர்ப்பித்த தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

### மைத்திரிபாலா ஆதரித்தார்?

முற்போக்கு வாதிகளுடன் கூட்டுசேரவேண்டியதன் அவசியத்தைப்பற்றி பிரேரணை ரூபமாக பிரதமர் சமர்ப்பித்த மகஜரில் உள்ள அபிப்பிராயத்தை கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா ஆதரித்துப் பேசினார் என கூறப்படுகிறது. காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்லா கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தபோதிலும் எவ்வித அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

### பிரதமரின் விளக்கம்

கூட்ட ஆரம்பத்தில் பிரதமர் நாட்டின் அரசியல் சூழ்நிலை பற்றி தெளிவாக எடுத்து கூறுகையில் காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு முற்போக்கு வாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி திருப்திகரமான முறையில் நாட்டைநிர்வகிப்பது பொருத்தமாக இருக்குமெனக் கூறினர் என அறியப்படுகிறது.

காலஞ்சென்ற தமது கணவரை திரு. தகநாயக்கா வன்மையாக கண்டித்து திரிந்ததையும், பின்னர் தமது கணவர் அவரை மந்திரிசபையில் சேர்த்ததோடுமல்லாமல் பிரதமராக்கவும் விரும்பினர் எனவும் குறிப்பிட்ட பிரதமர் டாக்டர் என். எம். பெரேராவுடனும் இதர முற்போக்கு சக்திகளுடனும் சேர்வதில் எதுவித பாதகமுமில்லையென வெகு சூட்சமாக தெரிவித்தார் என அறியப் படுகிறது.

### சமர்ப்பிக்கப்பட்டமகஜர்

பிரதமர் காரியக் கமிட்டியிடம் பிரேரணைரூபத்தில் சமர்ப்பித்த மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது:- முற்போக்கு சக்திகளின் ஐக்கியத்துடனும் ஒத்துழைப்புடனும் காலஞ் சென்ற எனது கணவரின் தலைமையில் 1956-ல் கிடைத்த சமூக, கலாச்சார, அரசியல் பொருளாதார வெற்றிகளை பாதுகாப்பதற்காகவும், அதை மேலும் ஸ்தரப்படுத்துவதற்காவும் தேசிய அரசாங்கம் ஒன்றையோ அல்லது கூட்டரசாங்கம் ஒன்றையோ அமைப்பது பற்றி பரிசீலனை செய்யும் கடமையை மந்திரிசபை எனக்களித்தது. எமது கட்சியின் 1956-ம் ஆண்டு வெற்றிகளை ஸ்திரப்படுத்துவதுடன் முதலாளித்துவ காலனி ஆதிக்க ஆதிகார வர்க்கங்களின் செல்வாக்கை தோற்கடிக்கவும், அத்துடன் ஜனநாயக சோஷலிஸ இயக்கங்களை பலப்படுத்தவும் இருவித அரசாங்கம் அமைப்பதுபற்றி பரிசீலனை செய்ய வேண்டுமென மந்திரிசபை என்னிடம் வலியுறுத்தியது.

தேசிய அரசாங்கம் ஒன்று அமைப்பதென்பது எமது கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணானதாகும் என்பது உணரப்பட்டுள்ளது.

எமது அடிப்படைக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு எதிர்வரும் தேர்தலில் போட்டி தவிர்ப்பு செய்து கொள்ள விரும்பும் முற்போக்கு சக்திகளையும் சேர்த்து ஒரு கூட்டரசாங்கம் நிறுவுவதற்கு பிரதமருக்கும் மந்திரிசபைக்கும் தேவையான அதிகாரிமளிக்குமாறு கூட்டத்தினரை யான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்போக்கு சக்திகளுடன் நடத்திய, நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகள் பற்றி கமிட்டிக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மந்திரிசபை கேட்கப்பட்டுள்ளதாக கட்சிக்காரியரிசி திரு. டி. எஸ். சமரசிங்கா தெரிவித்தார்.

### முற்போக்கு சக்திகள் வரவேற்பு

கூட்டரசாங்கம் அமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமோக ஆதரவு கொடுத்திருப்பதை கூட்டரசாங்கம் அமைப்பதில் அக்கறைகொண்டுள்ள முற்போக்கு கட்சிகளின் வட்டாரங்கள் வரவேற்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரங்களும் இம்முடிவை பெரிதும் வரவேற்றன.

முற்போக்கு கட்சிகளின் தலைவர்களிடமோ பிரமுகர்களிடமோ காரியக்கமிட்டியின் முடிவு பற்றி அபிப்பிராயம் எதுவும் உடனடியாக பெற முடியவில்லை.

### 'மாபெரும் வெற்றி'

திருமதி பண்டாரநாயக்கா பதவிக்கு வந்த பின்னர் கிடைத்த மாபெரும் வெற்றி கூட்டரசாங்கம் அமைப்பது குறித்து காரியக்கமிட்டி அமோக ஆதரவளித்தது தான் என சுதந்திரக்கட்சியின் காரியக்கமிட்டியைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவர் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.


பாத்திரங்கள் வாங்கும் பொழுது
டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:
அலுமினியம் தொழிற்சாலை
மாவிட்டபுரம்.


## தென் கொரியாவில் புதிய மந்திரி சபை

லண்டன், மே. 9

தென்கொரியாவின் பிரதமர் செய் சன் டெல்லின் மந்திரி சபை ராஜினமாச் செய்துள்ளது. ஜனதிபதி விரும்பிய ஒரு மந்திரிசபையை அமைக்கும் பொருட்டே பிரதமர் தமது மந்திரிசபையைக் கலைத்தார்.

ஜனதிபதி திரு. சங் டிபால், மாஜித் தளபதி குவான் சங்கை பிரதமராக நியமித்துள்ளனர் என இறுதியாக கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இவர் முந்திய மந்திரிசபையில் வெளிநாட்டு அமைச்சராக பணியாற்றியவர்.

## டிம் காம் கொல்லப்பட்டார்

சைகோன், மே 9

தென்வியட்னும் முன்னுள் ஜனதிபதி டின் டயத்தின் சகோதரரான டின் காம் இன்று தென்வியட்னும் படைவீரர்களால் சுட்டுக் கொல்லப் பட்டார். தனது சகோதரரின் ஆட்சிக்காலத்தில் இவர் கொலைகளிலும் தேசத்துரோகமான வேலைகளிலும் ஈடுபட்டதாக குற்றச் சாட்டப்பட்டதைத் தொடர்ந்து விசாரணை நடத்திய இராணுவ நீதிமன்றம் இவருக்கு மரணதண்டனை விதித்தது.

## திருநாவுக்கரசர் குருபூசை

யாழ்ப்பாணம், ஞாயிறு

அராலி வடக்கு இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் திருநாவுக்கரசுநாயனாரின் குருபூசை கொண்டாடப் பட்டது. குருபூசை தினத்தன்று திரு. நா. தங்கத்துரை அப்பர்சுவாமிகளின் வாழ்க்கை பற்றியும் அவர் காட்டிய அன்புநெறி, சரிகை வழிபாடு, புரட்சிப்பாதை பற்றியும் சொற்பொழிவாற்றினர். இளைஞர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் விசேடபூசையும் நடைபெற்றன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 10-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.